உ

கணபதி துணை

# முகவுரை.

கடலாடையுடுத்த புவிமடந்தைக்குப் பரதகண்டமே வலக்
ண். கண்ணிற் கருவிழி தமிழ்நாடு. (குணகடல், குமரி, குட
ம், வேங்கடம் தமிழ்நாட்டெல்லைகள்.) கருவிழியிற் குருமணி
ணாடு. குருமணியின் உள்ளாடுபாவை கும்பகோணம். இங்
ஙனம்கூறியது கொண்டபொருளைக் குணமாகக்கூறும் பண்டை
வழக்கைப் பற்றியன்று. பரதகண்டம் மேலானதென்பது பிர
க்தம்; சாதிக்கவேண்டாம். பதினெண்பாஷைகளுள் கலையென
'பயர்கொண்டன வடகலை தென்கலை இரண்டுமே. (வடகலை=
ம்ஸ்கிருதம் தென்கலை = தமிழ். இவ்விரண்டுபாஷையிலுமே
வதம் பிறந்தது. வடகலையிற்பிறந்தவை நான்மறை. தென்
லையிற்பிறந்தன தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி. இவற்
ள் "மட்கல நிகர்க்கும் மறையவர் நான்மறை" "பொற்கலம்
கர்க்கும் புனிதர் தமிழ்மறை" மறையவர் அன்றி மற்றை
யார் தீண்டில் தீண்டலடையும் நான்மறை; ஆதலால் மட்கலம்.
மட்கலம் ஆரும் ஒருவரே தீண்டற்குரிய கலம்.) எத்திறத்
ாரும் செப்பத்தகுந்தது தமிழ்மறை; ஆதலில் பொற்கலம்,
பொற்கலம் யார்தொடினும் எவ்விதம் கையாடினும் தீண்டலடை
யில்லை.) அன்றி, எலும்பு பெண்ணாக்கியதும் கல் மிதக்கச்
சய்ததும் முதலைவாய் மதலையையழைத்ததும் தமிழ்வேதமே.
இனைய பலகாரணங்களால் வடகலையினும் தென்கலை சிறந்தது.
ஆகவே, அக்கலைவழங்கும் தமிழ்நாடு புவிமடந்தையின் கருவிழி
யென்பதும் சரதமே. இதுநிற்க, சோணாட்டைக் கருவிழியிற்
குருமணியாக உருவகப்படுத்தியது என்னையெனின், "சோணாடு
சோறுடைத்து" என்ற காரணத்தால் மற்றையநாட்டில் குடிப்
து கூழுங்கஞ்சியும் எனல் பெறும். பின்னும், "ஊரெலாம்
ட்டிதொட்டி உண்பது கம்பஞ்சோறு, பேரெலாம் பொம்மன்
திம்மன் பெண்டுகள் நாயும்பேயும்" என மற்றையநாட்டைக்
ம்பர் இழித்துக் கூறினமையானும் சோணாடு பெரிதென்பது
பெறும். அன்றியும்,

நீருங் காவிரியே நாரே
காவா மேன்மை

# முகவுரை.

மண்ணுளவ தம்சோழ மண்டலமே யென்றுரைத்த
வார்த்தை வாளால்
தெண்ணீர்வை யத்துள்ள பிறநாட்டுப் புகழெல்லாம்
செகுத்துத் திலைம
யொண்ணுத சோணாடு பொலியுமெனில அதன்சிறப்பு முற்
றுரைப்பார் யாரே

என கம்பர் சொல்லாலேக் கையாடினர் புராணிகரும். சோணாட்டின் சிறப்பிற்குக் காவிரியே காரணி. காவிரி வேறுநாட்டுத்துப் பாய்ந்து வளருமாயினும் அவள் புகுந்தலைப்பட்டும் துய்ப்பது சோணாடாதலின் அவள் இந்நாட்டிற்கேயுரிய மடந்தை. காவிரியில் தலைக்காவிரி அகண்டகாவிரி என்னும் கட்டங்கள் வேறுநாட்டில் உளவாயினும் அவ்வளவு விசேடமுடையனவல்ல. இவற்றாலெல்லாம் இன்னபாதகம் நீங்கியது, இன்னார் முத்திபெற்றார் என்பது இல்லை. பஞ்சநதம், கும்பகோணம், மத்தியார்ச்சுனம், மாயூரம், காவிரிப்பூம்பட்டினம் என ஐந்து கட்டங்களும் சோணாட்டிலேயேயுள்ளது. ஆதலில், சோணாடே பெரியது. இவற்றுள், மத்தியிலுள்ள மூன்றும் முத்திக்குரிய கட்டங்கள், இம்மூன்றுள் முதன்மையாயது கும்பகோணம். ஆதலால், கும்பகோணம் மணியாடுபோலை யென்னப்பட்டது. அன்றியும், சிருட்டிபீசமெல்லாம் அமுதகுடத்தில் அடங்கின, அமுதகுடம் கும்பகோணத்தில் தங்கியது, அக்குடத்தினின்றும் தோன்றியவாதலின் மற்ற நகரங்களுக்கு இத்தலமே க்ஷேத்திரபீசமாயது. அன்றியும், மற்றைய நகரெல்லாம் மலரவன் சிருட்டி இத்தலமொன்றும் இறையவனார் சிருட்டி ஆதலாலும், கும்பகோணம் மணியாடுபோலை. அன்றியும், காசியிற் செய்தபாவம் மாயூரத்தில் தீரும். மாயூரத்திற் செய்தபாவம் கும்பகோணத்தில் தீரும். கும்பகோணத்திற் செய்தபாவம் கும்பகோணத்தில் தீரும். ஆதலினாலும் கும்பகோணம் மணியாடுபோலை. அன்றியும், கங்கைமுதலிய புண்ணியநதிகளும் தம்மிலாடியோர் பாவத்தை மாகநீராடிக் கழிக்கும் மகதீர்த்தம் இங்கேயுள்ளது, ஆதலினாலும், கும்பகோணம் மணியாடுபோலை. மேலேழின் மேலான சத்தியலோகத்திற்கதிபதி சதுர்முகனெமுதல், கீழேழின் கீழான பாதலவதிபதி பப்பராசேனருயுள்ள தேவரும் யாவரும் பூசித்திருத்தலால் கும்பகோணம் மணியாடுபோலை. இத்தனை அற்புதத்தலங்கள் கும்பகோணத்தைப்போல ஒருசேரவிருக்குமிடம் எங்குமில்லை. சிவஸ்தலம் பத்து, விட்டுணுஸ்தலம் நான்கு, இதனாலும், கும்பகோணம் மணியாடுபோலை. இது நிற்க,

ஈண்டுக்கூறிய சிவஸ்தலங்கள் பத்தில் அமுதகடசம்பந்தத்தாலாயின ஆறு. அன்பர் பொருட்டாயின நான்கு. விட்டுணுஸ்தலம் நான்கும் அன்பர்பொருட்டே.

# முகவுரை.

## I. சிவஸ்தலம்.

i. அமுதகடசம்பந்தத்தாலாயின

(1) கும்பேசம்.
(2) சிக்கேசம்.
(3) வில்வவனேசம்.
(4) நாளிகேரேசம்.
(5) யஞ்ஞோபவீதேசம்
(6) பாணபுரேசம்.

ii. அன்பர்பொருட்டாயின நான்கு

(1) விஸ்வேசம்.
(2) ம[illegible]பாகேசம்.
(3) மாலதீவனேசம்.
(4) கைலாயநாதம்.

## II. விட்டுணுஸ்தலம் நான்கு:—

(1) ஆராவமுதன்றளி. (சாரங்கபாணிகோயில்)
(2) சுதர்சனன்றளி. (சக்கரபாணிகோயில்.)
(3) வராகப்பெருமான்றளி.
(4) வரதராஜன்றளி.

[illegible] தலங்களைப்போலவே தீர்த்தங்களும் பதினான்கு. இவற்றுள், இயற்கையின் ஆயின ஏழு. செயற்கையின் ஆயின ஏழு.

## I தீர்த்தங்கள்.

i. இயற்கையின் ஆயின ஏழில்,

(1) பொற்றாமரை.
(2) மகாமகதீர்த்தம்.
(3) வருணதீர்த்தம்.
} தடாகங்கள்.

(4) காசிபதீர்த்தம்.
(5) சக்கரதீர்த்தம்.
(6) மதங்கதீர்த்தம்.
(7) பகவத்தீர்த்தம்
} காவிரி நதித்துறைகள்.

ii. செயற்கையின் ஆயின ஏழில்,


(1) அஸ்வத்ததீர்த்தம். (நாகதீர்த்தம்.)
(2) மங்களகூபம்.
(3) குரதீர்த்தம்.
} கூபம்.

(4) சந்திரதீர்த்தம்.
(5) சூரியதீர்த்தம்.
(6) கௌதமதீர்த்தம்.
(7) வராகதீர்த்தம்.
} தடாகங்கள்.

தலவிசேடம், மூர்த்திவிசேடம், தீர்த்தவிசேடம் ஆகிய மூன்றுவிசேடமும் பொருந்திய தலமே மேலானதலம். விசேடம் என்பது எண்ணிற்சிறந்தது எனப் பொருள்படும். (எண்தொகையும் மதிப்புமாம்.) எண்ணிற்குரிய இரண்டுபொருளும் தன்னிடமைந்துள்ளது கும்பகோணம். எங்ஙனமெனில், சங்கரப்பிரபு தங்கரத்தால் சிருட்டிக்கப்பட்டதாதலால் தலம் விசேடம். அவரே முதல், அநந்தமூர்த்திகளுள்ள யாவரும் பூசித்திருப்பதால் மூர்த்திவிசேடம். உலகத்துள்ள புண்ணியதீர்த்தங்கள் யாவும் ஒருசேரவந்து ஆடும் காரணத்தால் தீர்த்தம் விசேடம். ஆதலால், கும்பகோணத்திற்கு உயர்வு ஒப்பு இல்லை. இத்தலம் பஞ்சக்குரோசஸ்தலங்களில் ஐந்துடையது. கண்டாலும் கேட்டாலும் கருதினாலும் பாதகமனைத்தும் நீக்கவல்லனவாய் மூலதலத்திற்கு ஐந்துகுரோசத்திற்குட்பட்ட தூரத்துள்ளனவாயிருக்கும் தலங்கள் அம்மூலதலத்திற்குப் பஞ்சக்குரோசஸ்தலமாம். (குரோசம் = இரண்டரைநாழிகைவழி.) மேற்கூறிய தலம், மூர்த்தி, தீர்த்தம் முதலியவற்றின் வரலாறும் உறுபேறும் மேற்கூறப்படும். இஃது, மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட திருக்குடந்தைத்தலபுராணம் பத்தியமாயிருப்பதை கத்தியமாகச்செய்தால், நிகழும் வருடத்துவரும் மகாமக உற்சவத்தில் யாவர்க்கும் அநுகூலமாயிருக்குமென்று கருதிய சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்மேல் வசனரூபமாகச் செய்யப்பட்டு, கும்பகோண ஸ்தலபுராணவசனமெனப் பேர்பெற்றது. இதற்கும் 'மகாமகவைபவம்' முதலிய புத்தகங்களுக்கும் சிற்சில பேதங்கள் தோன்றும். அதற்கும் ஆதாரமாகக்கொள்ளப்பட்ட நூலே இதற்குக் காரணமாதலின், வசனரூபமாக எழுதியவர்கள் வகைசொல்லவேண்டியவர்களல்லர். பலருக்கும் பயன்படும்படிசெய்த இந்தச் சிறுபுத்தகத்தில் பலவழுக்களிருப்பினும் அவ்வழுக்களைப் பாராட்டாமல் குற்றத்தைத்தள்ளிக் குணத்தைக்கிரகிப்பார் பெரியோர் என்பது எழுதியவர் துணிவு. இதைத் தொண்டைமண்டல குலதிலகராகிய மயிலை அ. இராமமூர்த்திமுதலியாரவர்கள் அச்சிட்டுத்தருவதாய் அன்புடன் ஒப்புக்கொண்டார்கள். இதற்குக் கைம்மாறு ஏது. பரோபகாரமே புருஷார்த்தமாகக்கொண்ட அரியகுலத்தின் உரிமைபூண்டார்க்குக் கைம்மாறுவேண்டாம்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

முகவுரை முற்றிற்று.





உ

கணபதி துணை.

# கும்பகோண
# ஸ்தலபுராண வசனம்.

## முதல் பாகம்.

### ஆதிவிநாயகர் துதி

பூமேவு தமதருளா லுயர்வுமுயர் விலதுமெனப்
புவனங் கூறும்
மாமேவு மொழிக்கிளைய உயர்திணையி னஃறிணைமா
வதனங் கொண்டோர்
பாமேவு முறையிணைந்து மருளமைந்து பயில்வதுபோல்
பயிலா தென்றும்
தாமேவு மருளமைந்த ஆதிவிநா யகர்சரணம்
சார்ந்து வாழ்வாம்.

### 1. கும்பேசர் வரலாறு

பூர்வம் பிரமதேவருக்குத் தினகற்பம் உண்டாகவே சிருட்டிபீசம் சிதையுமோவெனக் கவலையுற்றவராய் அவர் கயிலையங்கிரியையடைந்து சிவபெருமானைத் தரிசித்து சகபீசம் அழியாவண்ணம் தந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, சங்கரப்பிரபுவும் ஓ புங்கவ, கவலையுறலவேண்டாம் அமிர்தமும் ஜலமும் மண்ணிற்கலந்து பிசைந்து, அழியாத குடம் ஒன்றுசெய்து, அமுதகலையைப் பூணூலாகச்சார்த்தி, உமக்கு ஏற்கனவே ஏராளமாய்க

கொடுபெட்டிருக்கும் சகபீஜங்களை அதனுள் மத்தியில்வைத்து வேதம், ஆகமம, புராணம், இதிகாசஙகளை நாற்புறமும்வைத்து நிறைய அமுதமபெய்து, மாவிலைசொருகி, தேஙகாய்சார்த்தி, தருப்பைமுடிசேர்த்தி, வில்வபத்திரங்களால் அருச்சித்து, உறியிலேற்றி மேருவின் மேல்பாரிசத்தில சாயாமல தூக்கிககட்டி அஙகுத்தரித்திருநம், பிரளயமுண்டாக, அமுதகடம அசைந்து, தென்றிசை நோக்கிச்சென்று, ஓரிடத்தில் தங்கும்; அதிற்சென்று பீஜங்களையெடுத்துப பிரம்சிருட்டியைச்சரிவர நடத்தலாமென்று திருவாய்மலாநதனர். பிரமாவும அங்ஙனமேசெய்து, ஆவலுடன் காத்திருநதனர். பிரளயந்தோன்றி, விண்ணுற நிமிாநதுவரவே, அமுதகடமசைந்து, மிதந்து தென்றிசையிறசென்று, எந்நாட்டிறகும், முன்னோட்டத்தகும், தென்னாட்டுள், நன்குடாகிய சோணாடே. பெரிதெனறு யாவருங்கொண்டாட, அஙகு ஓரிடத்தில சாரச சிவபெருமான் சொல்லியருளியவாறு குடம சுழல, மாவிலையும காப்பையும சிதறவிழ, வன்னியும் இலிங்கமும ஆயது. இது திருக்கலசநல்லூர். (சாக்கோட்டை) இப்பால் குடம் வாயுதிக்கு நோக்கிச்சென்று ஒரு குரோசம்போய்த் தங்கியது. குடம் இஙகு தங்க, பிரளயங் கண்டோர் அதிசயிக்கும் விதமாய் அரைக்கணத்தில் அடங்கி யொடுங்கியது. பிரமாவும் காந்தத்தைத் தொடரும இரும்பைப்போல் பீஜகுடத்தைப் பின பற்றிச்சென்றனா.

இது இன்னணமாக கயிலாயத்திருந்த கண்ணுதற்பெருமான் ஓர் வேடருபமதாங்கி கணநாதா யாவரும பரிவாரஙகளாயத் தொடர, உமாதேவியை விடைகொண்டு தென்றிசைநோக்கிச் செல்லுகையில், திருவிடைமருதூருக்குக் கீழ பாரிசத்தில் வந்தவுடன் அமிர்தகுடத்தைக்கண்ணுற்றுப் பக்கத்தினின்ற சாஸ்தாவுக்குக்காட்டி இக்குடத்தை ஓரம்பால் சிதைத்து உள்ளிருக்கும் அமிர்தம் நாறறிசையும வழிநதோடச்செய்வது நமது உத்தேசம் என்றனர். சாஸ்தாவும தேவரீர் திருவுளப்படி உடனே ஆகுகவென்று தனது தூணியினின்றும் ஓர் அம்பை எடுத்து ஐயனிடம் நீட்டினார். அப்பா இது அழியாமயகுடத்தை அழிக்கவல்ல அமபு அன்று அதன் உண்மை இதோ தெரியுமெனச்சொல்லி, அண்ணலும் வில்லைவளைத்துக் குணதொனிபண்ணி பாணத்தைப் பிரயோகிக்கவே, அது காற்றினும கடுக விரைந்தோடி அமுதகுடத்தில் தாக்கியும் அது அழியாதிருந்தமைகண்டு சாஸ்தாவும் தலைகுனிந்து நிற்க, ஐயன் அவரைத் தேற்றி அவ்விடத்திலேயே அவரை இருத்தினார். இந்த இடம் பாணபுரம. இப்பால ஐயன் சற்று மேற்கேசென்று நின்று பாணம் ஒன்று தொடுக்க, குடம் இரண்டாகி, மூக்

கட்பிரான் திருவுளத்தால் நாற்றிசையும் வழிந்து, ஐந்து குரோசதூரம் ஆறாய்ப்பெருகி எழுந்த அமுதம் எண்டிசாமுகமுஞ்சென்றது. குடத்தோடு சம்பந்தப்பட்ட உறி, வில்வம், தேங்காய், பூணூல் எல்லாம் பல பக்கங்களில் சிதற, குடவாயில் தென்கிழக்கில் யோசனையொன்றிலபோய் விழுந்தது. இந்த இடம் குடவாயில், இங்குண்டாயலிங்கம் கோணேசர். உறி முதலிய விழுந்த விடங்களில் முளைத்த லிங்கங்கள் முறையே சிக்கேசர், (சிக்கம = உறி) வில்வவனேசர், நாளிகேரேசர், (நாளிகேரம = தேங்காய்.) யக்ஞோபவீதேசர், (யக்ஞோபவீதம = பூணூல்.) என விளங்கு; பாணம தொடுத்த இடம பாணபுரேசம் ஆயது. வழிந்த அமுதத்தைப் பூமி குழிந்து தாங்குகையால் அண்ணல நினைந்தருள, அவ்வண்ணமே அமுதம இரண்டிடத்தில் திரண்டு நின்றது. இவ்விரண்டும பொற்றாமரையும மாதீர்த்தமும் ஆயின. கும்பத்தினவாயமேலேயென்று குடவாயில ஆயதாக சொன்னேம், கும்பத்தின கோணம இன்னதாயது என்றதெரிந்துகொள்வது அவசியம. (கும்பத்தின் வாயபோக எஞ்சியது கோணம.) இது இருந்த இடத்திலேயே இருக்க வேடரூபங்கொண்ட சிவபெருமான் கும்பத்தைக்குழைத்து அமுதத்தால் நனைந்தமணலை வாரியெடுத்து குடத்துடபோட்டுப பிசைந்து பிசைந்து பெரியலிங்கமாக்கினர். இதைபபூசித்து ஐயன் கொண்ட வேடம நீங்கிப பண்டைவேடம தாங்கி இலிங்கத்துட புகுந்து சோதிமயமாய் விளங்குகின்றார். இந்தத்தலம இலிங்கம் கும்பத்தில் தோன்றியதால கும்பேசர பிரமசிருட்டிக்கு முற்பட்டதால் அதி கும்பேசர் அமுதகும்பத்தில் உற்பவித்ததால அமுதகும்பேசர் என்ப பலகாரண நாமம்பூண்டுள்ளவர்.

(இத்தலத்தை எம்பிரானே பூசித்து லிங்கத்துட் கலந்தனர் என்று மேலே கூறினேம் இங்ஙனம நிசழ்ந்தது தனனைபபோல ஒரு மனப்பட்டவராயப பூசிடபவருக்கு அரிய சாயுச்சியபபதவியளிப்பனென்பது குறிப பின் வெளிப்படுத்தவேயாம) பின்னர் பிரமதேவரும விதிப்படி பூசித்துத்துதித்து வேண்டிய வரங்கள பெற்றனர் (பூசாவிதி தெரிந்துகொள்ளவேண்டியவாகள் புராணத்தின் பிரமன் பூசைபுரிபடலத்தைப்பார்க்க. விதியினுல் ஏறபட்ட விதிகளாதலால அவ்விதிகள் அரிய விதிகளே) அவர் செய்ததுதியின் அருமை அற்புதம! அற்புதம்!!

எவனருள் வலியா விண்டைமேல் லணையா
னெவ்வுல கங்களும் படைப்பேன்
எவனருள் வலியா விணர்த்துழாய் முடியான்
எவ்வுல கங்களும் புரப்பான்

எவனருள் வலியா லுருத்திரப் பெருமான்
எவ்வுல கங்களு மழிப்பான்
அவனொரு குடமூக கமர்ந்தகும் பேச
னவன்மல ரடித்துணை தொழுவேன்.

பிரமனாகி யான் படைத்தற்கும், விட்டுணுவாகி அவன் புரத்தற்கும், ருத்திரனாகி உவன் அழித்தற்கும், எவனருள் முதற் காரணமாயுள்ளதோ அவனே குடமூக்கமரும் கும்பேசன். அவனடியை யான் பணிவேன்.

இருக்கு எசுர் சாமம் எனும் மூன்று வேதத்திற்கு நடுவேதம் எழுகாண்டமுடையது. அக்காண்டங்களுள் நடுவாகிய நாலாங்காண்டம் எழுபாகமுடையது. அவ்வேழுபாகத்தில் நடுவாகிய நாலாம்பாகத்தின் நடு மனுவிற்குரியவனாகிய கும்பேசனைத் தொழுவேன்.

காலாக்கினிருத்திரம், சாபாலம் முதலிய உபநிஷத்துக்களில் விஸ்வன், விஸ்வசேவியன், அரிகேசன், புட்டிவருத்தனன், சம்பு, ருத்திரன், ஈசன், மாதேவன் எனும் பெயர்படைத்துள்ள கும்பேசனைப் பணிவேன்.

“பற்கன்” என்னும் பெயரால், காயத்திரியில் குறிப்பால் உணர்த்தப்படுவோன் சிவனே. ஆதலின் அந்தணர்வழிபடும் பொருளாயுள்ளவன் அவனே. அச்சிவகுறியாகிய கும்பேசனை யான் தொழுவேன்.

பிறவாதிருக்கவேண்டுவோர் யாவரும் பிறப்பிலியாகிய கும்பேசனைத் தொழுக.

காலதண்டம் கடக்கக்கருதுவோர் யாவரும் காலகாலனாகிய கும்பேசனைத் தொழுக.

மாதர் மயக்கிலகப்படாதிருக்கவேண்டுவோர் காமாரியாகிய கும்பேசனைத் தொழுக.

குற்றமெல்லாம் குணமாகக்கொள்பவன் கும்பேசனே என்பதற்கு அவர் நீலகண்டப்பெயரும், மெலியாரைக்காக்கும் வித்தகன் என்பதற்குச் சந்திரசேகரப் பெயரும், தாய்போலும் தயையுடையான் என்பதற்கு அர்த்தநாரீசப்பெயரும், விசனத்தைத்தீர்த்துச் சந்தோஷத்தைத்தரவல்லவன் என்பதற்குச் சங்கரப்பெயரும், அவர் பிரணவப்பொருள் என்பதற்குக் கொன்றைவேந்தப்பெயரும், தேவர்க்குமேலான தேவன் என்பதற்கு மகாதேவப்பெயரும், மூவரில் எஞ்சி நிற்பவன் என்பதற்கு சர்வசங்கரப்பெயரும் சாக்ஷியாம்.

(எஞ்சி நிற்பவனே முதலாயினான்; அவன் என்பதும் பெற்றாம்.)

புருடசூக்தம் என்னும் மந்திரத்தில் ஆதியினும் அந்தத்தினும் ஈசானப்பெயர் வருதலால் இடையிலுள்ள நாமங்களைத்

தும் இவனையே குறிக்குமென்று மீமாம்சை சொல்லுகிறது. (மீதலம முடி, பாதலம் அடி, பூதலம அரை, திசையெட்டும புயம, சோமசூரியாக்கினி கண்கள், சொல்லெலாம சுருதி என்று இவ்வாறு வேதக்கருத்துக்களை வெளியிட்டுத தோத்தரித்த பிரமதேவா வேணடிய வரம, யாவரும் அறியவேண்டிய வரங்களே.) அவையடியில் வருவனவாம.

உம்மை யொருகால தரிசித்தவா காம்யார்த்தங்களையும், பல காலும் தரிசிப்பவர் காம்யார்த்தத்துடன் மோக்ஷார்த்தத்தையும் அடையவேண்டும்.

கார்த்திகைச்சோமவாரத்தில் உன்சந்நிதியில் ௲ நெய்விளக்கேற்றுவோர்க்கு உமது திருவடிநிழல சித்திக்கவேண்டும.

உமது கோயிறறிருப்பணிசெய்வோா வேணடியவை வேண்டியவாறே பெறவேண்டும.

மாசிமகத்தில பணிவோரைப் பிரமஹத்தியும் சுற்றிக்கொண்டிருந்தாலும நீங்கவேண்டும.

மாசிவிழாவை நாள் விடாது பண்ணிவரவேண்டும.

மாசிவிழாச சேவிப்போா ராயனைபபோல் வாழவேண்டும.

இந்த விழாவிற்கும மற்ற விழாவிற்கும இயன்றதுகொடுத்துதவுவோா உமது சாயுச்சியத்தைப பெறவேண்டும.

மாசிப்பூரணையில பிராயச்சித்தமெல்லாம மாகதீர்த்தத்தில் சேரவேண்டும்

அன்று அத்தீர்த்தமாடியவா மாயாமலரகிதராகவேண்டும

மாகதீராட ஆசையோடுபுறப்பட்டவா வந்து முழுகாமல் மத்தியில இறக்கும்படி நேரிட்டாலும அஸ்வமேதயாகபலனையடையவேண்டும.

துவஜாரோகணமுதல் தீர்த்தவாரிவரையில் விடாது தரிசிப்பவர் மிகக கொடியாராயினும நீா அவாக் கெளியாராயிருக்க வேண்டும்.

பன்னிரண்டு வருடத்துக்கொருமுறை சிங்கத்திற் குரு வரும் மாசிமாதவிழாவை நாமே நடத்திவருமபடி செய்யவேண்டும்.

வருஷவிழா மாதவிழா நடத்துவோர் எப்போதும் துய்த்தல்வேண்டும். அவர்கள் எவ்விடத்திருந்து நினைத்தாலும அவ்விடமபோய் காரியம் கைகூடச்செய்யவேண்டும் என இன்னன பலவரம்பெற்று மகிழ்ந்தாா பிரமதேவா.

## கும்பேசர் பிரமோச்சவம்.

ஆதிகும்பேசருக்குத் திருவிழாநடத்தப் பிரமதேவர் உத்தேசிக்க, மாலேமுதலிய வானவாயாவரும் குடந்தையையடைர்

தார்கள். இப்பதியுள்ளார், நகரலங்கரித்தனர். ஆகாயம் அளாவிய பந்தலமைத்து, அதற்குத்தக்க விதானங்கட்டி, வாசமாலை நாற்றி, இளநீர்க்குலை தூக்கி, கரும்பும் வாழையும் காலில ஆர்த்து வீதிகளை புதுக்கினா. வீடுகளியாவும வெண்சுதைதீற்றி, நீறு மெய்பூசிய கமலாபோலாகினர்.

பிரமதேவா கும்பமதியில், சட்டிதிதியில் விதிப்படியெழுதிய விடைக்கொடியேற்றினர்; மறைகள் முழங்கின; வாத்தியம் கறங்கின.

கொடியேறினதினத்தில் இந்திரவிமானம் எமபிரானுக்கும், தம்தம்வாகனம் பிள்ளையார் பிராட்டியாருககுமாக்கி, பஞ்சமூர்த்திகளையும், வீதிக்கு எழுந்தருளப்பண்ணினா. மறுநாள்முதல ஒருநாள்போலச் சிவபெருமான் சேடன், பூதம், யானை, இடபம் கயிலை, பூரதம், குதிரைமுதலிய வாகனத்து எழுந்தருள மற்றையவர் தததம் வாகனங்கொண்டு வந்தனர். எட்டுநாள் உரசவம இப்படியாக மறுநாள் பொற்றேருவாய்ப்பாகதருளிய எமபிரானைக் கண்டோர யாவரும களிகூர்ந்து துதித்தனர். பெண்டிர மட்டுமே புலம்பித்தவித்தனா.

1. மனமதனை யழித்தசிர மன்மதரூபங்கொண்டது, பழிமாற்றவோ வெனபார சிலா.

2. முன் ஒரு அமுதகுடத்திலபொருந்திய நீர், எம் இரு அமுதகுடத்திலும பொருந்துதல் தகும என்பார் சிலர். (இரு அமுதகுடம்=தனம்).

3. மயன் அமைத்ததேரினும், அயனமைத்ததேர் அதிக விசேடம் என்பார் சிலர். (அயனமைத்ததோ=அல்குற்றடம).

4. பாதிமங்களம் ஆனநீர், மீதிமங்களம் ஆமபடி எங்களைச் சேரும என்பார் சிலர்.

5. விதிமகன் மகளைக்கொணடவன், விதிமகளைக்கொள்ள விதியின்று என்பீரேல் விதிவிலக்கு உமக்கேதுகாணும என்பார் சிலர்.

6. மாணுகிய எங்களுயிரை மாயககத்தான் முன் வேடருபம்கொண்டு வெளிபடடீரோ என்பார் சிலர்.

7. எல்லாரும இரக்கப்புகுந்தால் இவர்க்கு எப்படித்தான் கொடுக்க இயலும என்பார்.

8. அறிஞர்யாவரும் ஆசைப்படத்தக்கவர் என்றுகேட்டு ஓடிவந்தோம, இப்படித் திகம்பரராய் நிற்பார் என்பது தெரிந்தோம் இலலையே எனபார்.

9. கண்டோரெல்லார்க்கும் கவலையைத்தரும் உங்களுக்குச சங்கரப்பேர் தந்ததார் என்பார். (சங்கரன்=மகிழ்விப்பவன்.)

10. காமனையெரித்தவர் என்பது அறிந்தும, காமித்தல் நங்குற்றமே அன்றி அவர்குற்றம் அன்று என்பார்.

இவ்வண்ணம் உலாப்போந்த இறைவனைத் தேரினின்றும் இறக்கி, திருக்கோயிலிற் சேர்த்தனர் பிரமதேவர்.

(பத்தாநாள் அவப்ருதஸ்நானம் மகாதீர்த்தமகிமையிற் காண்க).

## பஞ்சகுரோசஸ்தலங்கள்.

திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், திருத்தாரேசுரம், திருவேரகம், திருப்பாடலவனம் என ஐந்தும் கும்பகோணத்தின் பஞ்சகுரோசஸ்தலங்கள்.

பிராட்டி மங்களநாயகி கைலையைவிட்டு குடந்தையைமேய காலத்து அமுதத்தால் நனைந்த பஞ்சகுரோசதூரம் வலம்வந்து பதியுட் புகுந்தாளெனின் மற்றவர்க்குச் சொல்வானேன். கும்பகோணஸ்தலயாத்திரை செய்யப்புகும் எவரும் இடைமருதூர் முதலா பாடலவனமீறாகப் பஞ்சகுரோசஸ்தலங்களை விதிப்படி தரிசித்து, ஒவ்வோர் பகல் தங்கி வலம்வந்த பின்னரே கும்பகோணப்பிரவேசம் செய்யவேண்டும். செய்தால்தான் யாத்திரை பலன் பூர்த்தியாகக் கிடைக்கும்.

### 1. திருவிடைமருதூர்.

இஃது கும்பகோணத்திற்குக் கிழக்கே, இரண்டு குரோசதூரத்துள்ளது. உலகோருய்ய அம்மையொருட்டுச் சிவபெருமான் தன்னைத்தானே பூசித்ததலம். விநாயகர், சுப்ரமண்யர், பிரமர், விஷ்ணு, வரகுணபாண்டியர் ஆதியோர் பூசித்திருக்கின்றனர். வரகுணதேவர்க்குப் பிரமஹத்தி நீங்கியது. (இது சோழன் பிரமஹத்திபெயர் தவறுகப் பற்றுக்கிடக்கக் கீழ்க்கோபுரவாயிலில் இருப்பதை இன்றும் காணலாம்) தைப்பூசத்தில் வியண்டருக்குக் காட்சி அளித்ததால் இத்தலத்துக்கு அந்நாள் விசேஷம்.

### 2. திருநாகேஸ்வரம்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்குத்திசையில் ஒரு குரோசதூரத்தில் திருநாகேசசரம் உள்ளது. இத்தலத்திற்கு சண்பகாரண்யம் என்றோர் நாமமுமுண்டு. இத்தலத்தை, ஆதிசேஷன் அடைந்து சண்பகவனமொன்று உண்டாக்கி, அம்மலர்கொண்டு ஆயிரவருஷம் பூசித்தார். ஆகலின் இது அவ்விருதிருநாமங்கள் வாய்ந்துள்ளது. வாசுகி கார்த்திகைச் சோமவாரத்தில் முதற்சாமத்தில் இத்தலத்தையும், இரண்டாம்சாமத்தில் சமினத்தையும் மூன்றாம் சாமத்தில் புன்னாகவனத்தையும் பூசித்து, நாலாஞ்சாமத்தில் பாதலம் சென்று முன் மூன்றுசாமப் பூசையைப்பயறிட

பேசியிருந்து முத்தி பெற்றார். இதனாலும், திருநாகேசசரத் திருநாமம் உண்டாயது. இத்தலத்து ஒருநாள் உறையச் சிவநாமங்களை வசனிப்பாராயில் முத்தி பெறுவது திண்ணம் என்பது மேலே வாசுகிப் பூசைப்பலனால் விளங்கும். மூர்த்திவிசேடம் இங்ஙனமாகத் தீர்த்தவிசேடம் செப்புதற்கரியது.

ஆதிசேஷன் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் அநேகவருஷம் மூழ்கிவந்தார்; பின்னர் சூரியன் மூழ்கியகாரணத்தால் சூரிய தீர்த்தம் ஆயது. கார்த்திகை ஆதிவாரம் அத்தீர்த்தம் ஆட விசேஷம். வாசுகியாடிய கார்த்திகைச் சோமவாரமும் விசேஷமே. தருமதேவர் மூழ்கிப் பலவரம்பெற்ற காரணத்தால் தரும தீர்த்தமுமாயது. இது நிற்க,

இச்சிவத்தலத்தின் தென்பால் ஒருவிட்டுணுத்தலம் உள்ளது இதற்குத் திருவிண்ணகர் என்றும் திருநாமம் உண்டு. இது ஆதியில் மார்க்கண்டேயர் ஆசிரமம்.

இவர் அலவண உண்டி (அலவணம் = உப்பில்லாதது) கொண்டு அரிய தவசுபுரிய, திருமகளே ஒருமகளாய் வந்து வளர்ந்தாள். நங்கை முதிர்ந்து மங்கைப்பருவம் வாய்த்தனள். தந்தையானவர் இந்தப்பெண்ணமுதுக்கு எந்த வரன்வந்து கூடுமோ என்று எண்ண முற்றிருக்கையில், மாதவரைச் சோதிக்க மாதவப் பெருமானும் விருத்தவேதியனாய் வெண்ணீறு பூசி அங்குவர, மார்க்கண்டேயரும் அருச்சனைத்தும் வந்தகாரணம் என்னென்ன பசியால் மெலிந்தேன் அன்னமும் தருவீர் என்று வந்தேன் என, உம்பசிக்கு என்பால் என்ன இருக்கிறது, உப்பிலா உணவுண்டு உண்டுபோவீரோ வென; எந்த உண்டியினும் தந்தால் போதும் உண்பதில் தடையில்லை என்றார். என்னிடத்திருப்பதைத்தர யாது தடையுமில்லையென, பேச்சைக்கொண்டு மடக்க எண்ணி, உத்தமரே நீர் சொன்னதே சரி, உம்மிடத்துள்ளதை ஒளியாது கொடாவிடின், விடேன் என்றார் முனிவர் திருத்தங்கிசைய பெண்ணைத்தாரும் என்று பிடிக்க, பிதாவும் கலங்கி வந்து வந்தாலும் சொன்னது மறுப்பது நமக்குத்தோஷமாகுமல்லவென்று எண்ணிய பெண்ணைத்தாரை வார்க்க, தண்ணீரைப் பெண்ணொடு கொண்டு, அலவண உண்டியை ஆர அருந்தி விருத்தப் பருவம் நீங்கி குமாரப்பருவந்தாங்கி சங்கமுதலிய அங்கங்கள் காட்டி மாதவனையும் சேவியையும் மகிழ்வித்து பெண்காணியே தன் காணியாகக் கொண்டவழு புரிசையும், மதிதவழ் சிகரியும் வாய்ந்த கோயில் கொண்டருளினர். இது விண்ணகருக்கொத்ததாயிருந்ததுபற்றித் திருவிண்ணகராயது.

ஐயனும் அன்று தொட்டு உப்பிலா உண்டியை உகந்து உப்பிலியப்பன் என்றும் ஒப்பிலாவிலா நாமம் பூண்டனர். இது திருநாகேச்சரத்தின் ஒருபாகமே.

### 4 திருத்தாரேச்சரம்

கும்பகோணத்திற்கு நிருதிமூலையில் அரைக்குரோசத்தில் ஓர் தலமுண்டு. அதன் பெயர் உருத்திராட்சவனம். இந்தத் தலத்தைத் தரிசிப்பவர்களுக்கு கோஹத்திபாதகமும் நீங்கும். நினைந்தவர்க்கும் யமதண்டம் இல்லை. இது விண்ணவரும் மண்ணவரும் விரவிவாழுந்தலம். இவ்வுருத்திராக்ஷவிருக்ஷத்தின் இலை, காய், கிளை, யாவும் தேவாம்சமே. இவ்விருக்ஷத்தின் கீழ் தான் எமது ஞானநாயகன் அமர்ந்தருளு தானம். இவரைப் பூசித்துப் பேறு பெற்றவர் அநந்தம்.

1. 'இயமன்' அங்குள்ள சூலதீர்த்தம் புகுந்து ஆடிச் சிவலிங்கத்தை அருச்சித்து தேவரை எல்லாம் ஒருங்கழைத்து ஆவணி அச்சுவனியில் உச்சவந்தொடங்கி மகத்தில் தீர்த்தவாரி நடத்தி, முன் ஓர் முனிவரால் தான் அடைந்த சாபம் நீங்கித் தன்னுலகடைந்தான்.

2. 'சூரசேனன்' என்பவன் பிரமஹத்திதோஷத்தை இத்தலத்தில் சென்று, அன்னதானம் செய்து கழித்தான்.

3. 'எக்கியன்' என்ற வேதியன் ஊழ்வினைவழிவந்த முயலகநோயை அன்னதானத்தால் ஒழித்தான்.

4. 'சுபுண்ணிய வேதியன்' குருபத்தினி சங்கமதோஷத்தை அன்னதானத்தால் போக்கினன்.

5. 'பிரகஸ்பதி' மதுபானப்பழியை அன்னதானம்செய்து அகற்றினன்.

6. 'ஐராவதம்' துர்வாசர் சாபத்தால் கரிந்த தன் தேகத்தைப் புனிதமாக்கியது. எம்நாதத்தலஸ்நானமும் எம்பிரான் நாமமும் இக்கருமபிணிக்கொரு மருந்து. இத்தலம் இதனால் ஐராவதேச்சரம் ஆயது.

7. 'தாரன்' பூசித்து, சாகாவரம்பெற்று வானவரைச்சவட்டி, இன்னும் அங்கு வாழ்கின்றான். இதனால் இத்தலம் இப்பால் தாரேச்சரம் ஆயது. இவனால் ஏற்பட்டதுதான் இத்தல வைசாக உச்சவம்.

(இத்தலத்திற்கு அன்னதானமே அமைந்த தானம் என்பது இப்போதும் அங்குள்ள அன்னசத்திரத்தாலும் வெளிப்படை.

### 4 திருவேரகம். (சுவாமிமலை).

கும்பகோணத்திற்கு மேற்கில் ஒரு குரோசத்தில் குருகிரி என்று ஓர் தலமுள்ளது. (குருகிரி = சுவாமிமலை.) கூன், குருடு, ஊமை, முடம், பித்தம், வாதம், குட்டம், மற்றவும் நீக்கும் மருந்து இக்குருகிரியில் இருக்கின்றது. ஒருவன் வழிப்போக்கனாய் அவ்வழியே சென்றாலும், வேறு காரணத்தால் அங்கு தங்கினாலும், தூரத்திருந்து கிரியை நினைத்தாலும், பெரிய வா

பங்களைப்பெறுவன். ஒப்புயர்வில்லாத உம்பர்பிரானையும் வணக்கங்கொண்டது இம்மலையென்றால், அதன் உயர்வை வரைய வேண்டுமோ. மலைபோலொத்த விமானமென்ன, மண்டபமென்ன, எல்லாம் தெய்வத்தன்மைபொருந்தியதுவை. மலைக்கேறும் படிகள் பிரபவாதிவருடதேவதைகள். குளம், கூபங்கள் எல்லாம் கங்கை தங்குமிடம். மலையிலேறுமுன் குருபரன் திருவுருவை மனதிற்பதித்து, அடிப்படிக்குத் தேங்காயுடைத்துப் படிதோறும் வருடதேவதைகளை வரிசையாக நினைத்து, மலையிலேறி, இறைவன் திருவடியை மலர்கொண்டர்ச்சித்து, அப்பால் இலிங்கதரிசனம் செய்யவேண்டும். செய்தார் யாவரேயாயினும் இம்மை, மறுமை, வீடு எனனும் மும்மைப்பலனையும் முறையே செம்மையின் அடைவர்.

1 கார்த்திகைப் பூரணையில் குருநாதனைத் தரிசிப்போர்க்கு நாலாம்பதவி கிடைக்கும். அதினத்தில் அவர்க்கு அபிடேகம் செய்வோரை வந்துவீடே. அன்று அவர் சந்நிதியில் ஒரு விளக்கேற்றுவோரை உம்பரேத்துவர்.

2. தைப்பூசத்தில் பிரமதேவர் பூசைசெய்து, பேறுபெற்றிருக்கிறார். குமாரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், குமாரனுடையவன் கேகயதேசத்தரசன் ஒருவன் சிவத்துரோக தோஷமுற்ற விடநோயுற்று கூனிக் குறுகுறுத்து அவஸ்தைப்பட்டான். சாமியையாசனைகேட்டு சாமிருகன் திருமலையடைந்து தைப்பூசத்தில் குமாரதீர்த்தமாடி மலையிலேறி பாலமுருகனைக் கொண்டு, பிரானை ஆராதித்து, அருச்சிக்க; விடநோய் நீங்கினவனாய், கோபுரமுதலிய கருப்பணிசெய்து திருவாபரணச் சிறப்பு நல்கினன். இப்புண்ணியத்தால் கார்த்தவீரியன் எனனும் ஓர் புத்திரனைப்பெற்று முத்தியும் பெற்றனன்.

சாமிநாதருக்கு ஆட்டுப்பால் தேவசாந்நித்தியம் உள்ளது. ஆசாரப்பிழை ஆகாது. பாறகுடகத்தில் கால்பட்டால் வாதநோய் பாதிக்கும்.

3. சித்திரைமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில் அங்கப்பிரதக்ஷணஞ்செய்வோர் வேண்டியவை வேண்டியவாறு பெறுவர். இல்லறத்துக்கேற்ற நற்குண நற்செய்கையுள்ள இல்லாளை வேண்டினும், குலத்தை விளக்கும் குணமுள்ள பிள்ளை வேண்டினும், சராசகராதிரோகங்கள் நீங்கவேண்டினும், ஐந்திரியநிக்கிரகம் வேண்டினும், அங்கம்பதறாது, அடிதளராது, மனந்தலையாது, அமைந்த பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்த அடிப்பிரதக்ஷணமென்பாருமுண்டு. கிரிப்பிரதக்ஷணஞ்செய்ய, குஷ்டரோகம் நீங்கும். விதிபிழைத்து மலையிலேறில் வாதரோகம் வரும். அன்பின்றி யேறில் எருமைக்கடாச் செனமம் வரும்.

4 வைகாசி விசாகத்தில் தரிசிப்பவர் பாதகமெல்லாம் நீங்கி சிவன் முத்தராவர்.

கார்த்திகைமாதம் தைப்பூச அபிஷேகம் சிறந்தது; பிரதக்ஷிணம், விசேஷதரிசனம் விசேஷம்.

5 திருப்பாடலவனம் (கருப்பூர்).

கும்பகோணத்திற்கு ஈசான்யதிக்கிலே ஐந்து குரோசத்தில் பாடலவனமிருக்கின்றது. பொன்செய்யும் பாருந்து இவ்வனத்தேயுள்ளது தேவாதியோர் நம பொன்னுருக்கு ஒய்யாக வெண்ணி இருக்கின்றனர். இத்தலத்தெழுந்தருளிய இறைவன்பெயர் சுந்தரேசர். இவரைக்கண்டாராதித்து இயமன் நொறுங்கினன். அகஸ்தியர் பூசித்து அளவற்றவரம் பெற்றார். சூரகன் பூசித்து வாதமுயினன் குபேரன் பூசித்து இருநிதிபெற்றனன், இறைவரைக் கண்டு நன்மையும் ஆயினன். சோமகேதுவென்னும் கன்னநாட்டரசன் பூசித்து சொர்ணரேகையைப்பெற்றான். வாலகில்லியர் சித்திரைப் பௌர்ணமியில் பூசித்து சிவத்துடன் கலந்தார். ஆகையால் சித்திரைப் பௌர்ணமியில் யாவரும் பூசை செய்தல் ராவர். இத்தலத்தின் மகிமையைச் சூதமுனிவர் சொல்லக் கேட்டு புராணத்தில் புகழ்ந்துவிட்டிருக்கின்றார்.

இவ்வைம்புண்ணியத்தலங்களையும் பஞ்சக்குரோசஸ்தலமாய்ப் படைத்துள்ள கும்பகோணப் பெருமை கூறப்பட்டது.

கும்பகோணத்தில் இந்திரன் முதலிய திக்குபாலகர்கள் பூசைசெய்து பலவரம் பெற்றனர். பூதப்ரேதவரிசையும் பூசித்துப் பேறுபெற்றது அநேகர். அவருள் ஒருவர் கதையை ஈண்டு கூறுவோம்.

## சுதன்மன்.

பொருநைத்திரத்து விசையாசனமென்னும் நகரில் வேதியர் குலத்தில் கவுண்டின்ய கோத்திரத்தில் சகலசாஸ்திர பண்டிதரான தேவசன்மாவுக்கு சுதன்மனென்றொரு பிள்ளை. அவர் கெடாத விவசாயத்தால் தனதான்ய சம்பத்தில் இவருக்குச் சமானம் இல்லை யென்னும்படி வாழ்ந்தார். தந்தை காலஞ்சென்றனர்; தாயும் உடன்கட்டையேறினள். எஞ்சிய சுதன்மனும் மனைவியும் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். சிலநாளில் மனைவியிறக்க மற்றொரு பெண்ணைக்கொண்டார். அவளும் இறக்கப் பின்னுமொருத்தியை மணம்புரிந்தார். இவளும் இவளுக்குப்பின் மற்றொருத்தியும் அவ்வாறு மாயந்திட, பிசுக்கவன் ஐந்தாவது ஒருத்தியைக்கொண்டார். அவள்பேர் சித்திராங்கி, அவள் வயிற்றில் ஒரு மகவு உதித்தது, அது மூன்றுமாதத்தில் ஈன்றோரைவிட்டு வானுற்றது, இதுபோலப் பதினெட்டுப்பிள்ளைகள் பிறந்துபிறந்திறந்தன. பின்னொரு பெண்மகப்

பிறந்து முன்னவரை நாடிச்சென்றது. சுதன்மன் கவலையிருந்து சிவநற்காரியத்தில் முயன்றான், நந்தவனம் சோலைகளை யுண்டாக்கினார். சுமைதாங்கிகளைக் கட்டினார். நாகப்பிரதிட்டை செய்தார், அஸ்வத்தப்பிரதக்ஷிணம் பண்ணினார். சேதுயாத்திரை செய்தார், பிராமணபோசனம் செய்வித்தார், கோதானங்களைக் கொடுத்தார், எத்தனை தானம் செய்யினும் புத்திரலாபம் உண்டாகவில்லை. முந்திய மனைவியர்கள் செத்தொழிந்தனர், பிந்தியவள் பெற்றொழிக்கிறாள், பேதமென்னவென்று தன்சொத்தைச்சிநேகிதனிடம் ஒப்புவித்து தானும்தன் மனைவியுடன்கூடத்தீர்த்தயாத்திரை செய்யும்பொருட்டுக் கால்நடையாய்ப் புறப்பட்டார். அப்போது அகஸ்தியர் மாணாக்கராகிய குசிகரைக்கண்டு வணங்கி, தனக்குற்ற கடுந்துன்பங்களைச் சொல்லியழுதார். குசிகர் சுதன்மனைப்பார்த்து ஓ சுதன்ம நீ முற்பிறப்பில் வேதபுரத்தில் வேதியனாய்ப்பிறந்து சிவாலயத்திருப்பணிகள் சிறப்பாகச்செய்த புண்ணியத்தால் இப்பிறப்பில் தனியசம்பத்துள்ளவனானாய் அதற்கு முற்பிறப்பில் குண்டினபுரத்து ஓர் வேதியனாய்ப் பத்துப் பெண்களைப் பெற்று பணவிருப்பால் அவர்கள ஒவ்வொருவரையும் ஐந்நூறு வராகனைப்பெற்று நோயர் விருத்தராதியர்கட்கு வாழ்க்கைப்படுத்தி ஒருத்தியைமட்டும் பணம்வேண்டாது நல்ல நாயகனுக்குக்கொடுத்தாய்; முன்னைய ஒன்பதின்மர்கள் இளமை பாழானதுபற்றி ஆற்றிவிழ்ந்திறந்தனர்; சிலர் நஞ்சுண்டிறந்தனர்; சிலர் மஞ்சட்பூசாது மாலைசூடாது காலங்கழித்தனர். இப்பாவம்சுற்ற சுகந்தரும் பருவத்தில் மனைவியர் ஒருவரொருவராயிறந்தனர். வாழ்ந்த மகளொருத்தி மகிழ்வின்பலனாய் இம்மனைவி தங்கினள். இது இப்படியிருக்கப் பிள்ளைபிறந்திறக்கக் காரணம் கேள். சீவைகுண்டத்தில் ஆலயத்துட்புகுந்து அருங்கனியைப்பறித்துண்டு அகமகிழ்ந்தாய். அப்பாதகத்தாலேதான் இப்படியாகிறது. இப்பாதகநிவர்த்திக்குக் கும்பகோணத்தையடைந்து மாமாகஸ்நானஞ்செய்து கும்பேசரைவணங்கிப் பஞ்சக்குரோசப் பிரதக்ஷிணமும் செயல்வேண்டும். கருங்குட்டநிவர்த்திக்காக யானும் அங்கே செல்கின்றேன் வாவெனப்போய்ச் செய்யவேண்டியயாவும் செய்தனர். குசிகர் குட்டநோய் நீங்கிச் சுத்தமாயினார். சுதன்மன் மகப்பெறுதலைக்கச் சுகமாக வாழ்ந்தார்.

## காமதேனு பூசை.

இந்திராதி தேவர்கள் ஒருநாள் சத்தியலோகம்செல்லக்காமதேனுவும் உடன் சென்று பிரமதேவரைத்தொழச்செல்லும் அவசரத்தில் தன் குளம்பு துர்வாசர்காலில் பதிய அவர் கோபம் கொண்டு பால் முதலிய பயன் அற்றுப்போகவெனச்சபிக்க அதைப்பிரமதேவனிடத்தில் சொல்லி வருந்தியது. கும்பகோ

ணத்தில் காசிபதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கும்பேசுரைத்தரி சித்தால் சாபந்தீருமென அங்ஙனமே சென்று செய்துய நீர் மைகண்டு விக்னேஸ்வரர் பூசை செய்யாதொழிந்தனை காரிய கைகூடவில்லை யென்னும் அசரீரிவாக்குக்கேட்டு கும்பேசர ஆலயத்தை யடைந்து குளம்பால் ஒரு கூபம் உண்டாக்கி அதன கரையில் கணபதி பதிட்டைசெய்து பாலமுது கொள்ளாயல் பெ ங்க அதன் நவநீதத்தை அப்பிள்ளையாருக்குப் பூசச்சாபம் நீங் யது காமதேனுவும் விண்ணுலகடைந்தது. இவ்வாறுபெயர் வெ ண்ணெய்ப்பிள்ளையார். இத்தீர்த்தம் குளதீர்த்தம் இதிலாடி இப் பிள்ளையாருக்கு வெண்ணெய் சாத்தி அர்ச்சனை புரிபவர்களுக்குண் டாகும் பேறு பெரிது.

இன்னும் இத்தலத்தைப் பூசித்தபேர், பெற்றபேறும்.

(1) கிருதவீரியன் பூர்வசன்மத்தில் பசுவைக்கொன்ற பா தகம் நீங்கி கார்த்தவீரியனுகிய ஆறு புத்திரனைப்பெற்றனன்

(2) வீரவன்மன் பிரதிட்டை செய்திருந்த நாகங்களைப் பின் னப்படுத்திய காரணத்தால் அங்கவீனப்பிள்ளை பிறக்க மனங்கவ ன்று கும்பகோணம் சென்று நாகதீர்த்தமாடி கும்பேசனைத்தரி சித்து நன்மகப்பெற்றுன்.

(3) இந்திரன் பூசித்துப் புத்திரனைப் பெற்றான்

(4) மாந்தாதா பூசித்துச் சக்கரவர்த்தி ஆயினன்

(5) ஏமவாகுவின் மனைவி பூசித்து வேதாளரூபம் நீங் கினள்.

(6) கர்மசன்மாவென்பவன் தந்தைக்கிழைத்த பாதகத்தால் நேரி ட்ட காக்கைவடிவை பூசித்து நீக்கினன்

(7) ஞானவான் தந்தைதாயர்களைக் கூர்மையாக்கிவருத்த நேரிட் ட இடையூறினால் இறக்க, தனைச்சேர்ந்த பாதகத்தைப்பூசித்து நீக்கி முத்தி பெற்றான்.

(8) சுவர்ணரோமன் மங்களாம்பிகையைப் பூசித்து முத்தி பெற்றான்.

இச்சுவர்ணரோமனே யன்றி மங்களாம்பிகையைப்பூசித்து ப்பேறுபெற்றவர் பலருண்டு அவருள் காசிபர் ஒருவர் அந்த வரலாற்றை ஈண்டுக்கூறுவாம

கயிலையங்கிரியை விட்டுக் கண்ணுதற்பெருமான் அமுதக் குடத் தை நாட்டி கிராதவேடம் பூண்டு நடத்தியவையனைத்தும் கண்ட தேவாதியரால் கேள்வியுற்று பயிலமர்ந்திருந்த பராபரை கயிலையை விட்டுக் குடந்தையை யடைந்து கும்பேசர் பங்கில் மந்திரபீடத்தில் அமர்ந்திருப்பாராயினள்


## காசிபதீர்த்தம்.

பிரமாவின் புத்திரனாகிய காசிபமுனிவர்க்கு அதிதி, திதி யென இருவர் மனைவியர். இவ்விருவரும் முறையே முப்பத்து

மூன்று கோடி வானவரையும் அறுபத்தாறு கோடி தானவரையும் பெற்றார். திதியிடத்தில் மிக்க அன்புடையராயிருந்து இரட்டிமைந்தரை உதவினீர் இது தர்மமா என்னுடன்கூடி பின்னும் சிலமைந்தரைப் பெறுதல் வேண்டுமென்று அதிதிசொல்ல அதற்கிசையாருதல் கண்டு அவளும் விடாத கனைடியாய்ப்பல வந்தம் செய்ய முனிவர் சீறி உதைத்துத்தள்ளினார். என்னை யிகழ்ந்து இளையாளையே நயந்தனையாதலின் ஆண்மை யிழந்து அலியாகுகவென, பத்தினி வாக்காதலால் அக்கணமே பலித்திட்டது. காசிபர் சென்று தாதையிடத்தறிவிக்க வானவரைச் சுருக்கி தானவரைப்பெருக்க நினைத்தனை. அதிதிமறுத்தாள் அவளை யடித்தாய் அவள் சபித்தாள். அவள் செய்தது சரி நீசெய்தது பிழை, ஆயினும் நம்மிடம் வந்த நீ சும்மாபோதல் சரியன்று. அலித்தன்மை நீங்கி ஆண்டன்மை பெறக்கருதில் பூதலத்துள் மாதலம், கும்பகோணம் அதையடைந்து காவிரிநதியில் கும்பேசர் திருமஞ்சனத்துறையிலாடி மங்களாம்பிகையைநாடித் தவம் புரிதல் வேண்டும் என அங்ஙனமே சென்று அருந்தவம் புரிந்தனன். அம்பிகை நேரில்வந்து அதிதிக்கிதமாய் நடவென்று ஆக்ஞைசெய்து ஆண்மையளித்து மறைந்தனள். அன்றுதொட்டு அத்தீர்த்தம் காசிபதீர்த்தமாயது அதில பத்தியுடன் மூழ்குவோர் இம்மை மறுமைப்பயனை எளிதினெய்தி முத்தியும்பெறுவர்.

## மங்கள கூபம் வரலாறு.

கும்பகோண மான்மியத்தைத்தனக்குக் கும்பேசர் சொல்லியருளிய ஞான்று கந்தர் அம்மைமடியிலிருந்து கேட்டிருந்தமையால் சூரபத்மாதியரைத்தொலைக்க வெழுந்தகாலத்தில் கும்பேசரைத் தரிசித்துப்போதல் நன்றென்றெண்ணி அங்கு வந்து பூசனை புரியுமளவு ஆடுவான் ஓர்தீர்த்தம் உண்டுபண்ணித்தரவென்ன அம்மைமகிழ்ந்து கும்பேசர் ஆலயத்தின் வடபாகத்தில் தன்கைவிரல் நகத்தால் பூமியைக்கிள்ளக்கூபம் ஒன்று உண்டாயது. இதற்கு மங்கள கூபமெனப்பெயர். கந்தராடிப்பூசித்ததால் கந்ததீர்த்தமெனப்பெயர் பெற்றது. எந்நதியும் தாம்சுமந்த பாவத்தைப் பொன்னியிலாடித் தொலைக்கப்பொன்னியும் இந்நீர படிந்து பாதகம்போக்கிய காரணத்தால் பொன்னிப்பெயருற்றது. சந்திரன் ரோகிணியிடத்தில் விசேடவாஞ்சை வைத்த காரணத்தால் தக்கன்சபிக்கக் கொடிய நோயுண்டாக அந்நோயைத்தீர்க்க இந்நீர்படிந்தனன், ஆகலில் சந்திரதீர்த்தப்பெயர் மேயது. இதில் மாந்தாதாமூழ்கி மகப்பேறுபெற்றான். அம்மகன் மூழ்கி இம்மாநிலமெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளும் உரம்பெற்றான் இன்னும் இதன் பெருமையெண்ண முடியாது.



உ

# சோமேசர் வரலாறு.

அமுத குடத்திற்கு ஆதாரமாயிருந்த உறியானது, அக்குடம் தங்கியிருந்த இடத்திற்கும் பொற்றாமரைத் தடத்திற்கும் கீழ்பால் சேர்ந்து சிவக்குறியாகியது, இத்தலம் சிக்கேசம்; இறைவன் பெயர் சிக்கேசர். (சிக்கம்—உறி) இம்மாதேவரைப் பூசிக்க, சந்திரனுக்கு, குரவன் மனைவியைக்கூடிய கொடும்பாதகம் நிவர்த்தியாயது, ஆனதுபற்றி சோமேசர் என்னும் நாமம் உண்டாயது. (சோமன்—சந்திரன்) அம்மை திருநாமம் சோமசுந்தரி, அம்மை திருமுன்னுள்ள தீர்த்தம் சோமதீர்த்தம். இதன் பெருமை மிகப் பெரியது, மகப்பேறு வேண்டினர்க்கு மகப்பேறும் மாநிலம்காக்க வேண்டினர்க்கு அரசச்செல்வமும் முத்திவேண்டினர்க்கு முத்தியும்வந்துறும் இத்தீர்த்தத்திலாடி இம்மூர்த்தியைப்பூசித்து பேறு பெற்ற பிரகஸ்பதி வரலாற்றை ஈண்டுக்கூறுவாம்.

மாளவ தேசத்தில் அங்கிரசு என்று ஓரந்தணர். அவர் மகாசிவநேசர். அவருக்கு உசத்தியன், பிரகஸ்பதி, சம்வாதசிவாசாரி, என மூன்று குமாரர்கள், அவர்களுள் நடுவுள்ளவன் தெய்வப் புரோகிதனாகவேண்டி கும்பகோணத்தையுற்று சோமநாதர் சோமசுந்தரியைத் தரிசித்து தன் மனோரதம் நிறைவேற கந்தம்

மூலம், காய், புனல், வாயு அருந்தி கடுந்தவசு நெடுங்காலம் செய்தான். சோமேசர் பிரசன்னமாகி உனது நுதிக்கு மெச்சினம் வேண்டியவரம் கேளென, அடியேன் தெய்வப்புரோகிதனாக ஆராவிருப்புடையனாயினேன் அவ்விருப்பம் நிறைவேறச்செய்ய வேண்டுமென, அப்பா நீ எண்ணியபடி எய்துவது எளிதன்று ஆயினும் அக்கினிட்டோமம், பிரகஸ்பதி சவனம் என்னும் இரண்டு யாகமும்செய்து நீ முடிப்பையாகில் உனதெண்ணத்தை யாம் முடிப்போம் என்று சிவபிரான் திருவாய்மலர்ந்தருள பிரகஸ்பதியும் ஓ ஐய அதற்குமிக்க திரவியம்வேண்டுமே யானென் செய்வேனென, நிதிக்கிழவனையழைத்து பண உதவிசெய்விக்க பிரகஸ்பதியும் சோமதீர்த்தக்கரையிலேயே குறிப்பிட்ட யாகங்களை நிறைப்பிக்க சோமேசர் உள்ளமகிழ்ந்து சுரர்களைக்கூய் இன்று முதல் இவனே நுங்குருவென்று ஏற்றுக்கொள்ளுவீர்களாகவென அவர்கள் இறைவனைப்பணிந்து தேவரீர் திருவாக்கிற் கெதிர்வாக்கேது எனச் சொன்னார்கள். சிவபெருமான் பிரகஸ்பதியைநோக்கி வாக்குக்கு அதிபத்தியம் உனக்களித்திருக்கிறோம் சிவபத்தியிற் சிறந்தவனாய் தேவமந்திரியாகுக எனச்சொல்லி திருவுருக்கரந்தனர். தேவர்களுந் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர், பிரகஸ்பதியும் சோமேசராலயத்தை மீட்டும்புகுந்து ஈசனைப்பூசித்து தேவருலகடைந்து தேவகுருவாய் விளங்குவானாயினன். வியாழன் பூசித்ததால் வியாழச்சோமேசர் என்னும் திருநாமமுண்டாயது. இது இக்காலத்து ஏழைச்சோமநாதர் என வழங்கிவருகிறது.

உ

## நாகேசர் வரலாறு.

அமுத குடத்துக்கு அருச்சித்த வில்வம் விழுந்த இடத்தில் சிவக்குறியொன்று தோன்றியது. அத்தலம் வில்வவனேசம். அந்நாயனார் வில்வவனேசர். இத்தலத்திற்கு நாகேசம் என திருநாமம் உண்டானதற்குக்காரணம் இங்குச் சொல்லுவோம்.

கருணைகரரான கண்ணுதற்பெருமான் ஒருகாலத்தில் ஆத்மகோடிகள் ஆறுதலடையவெண்ணி அடங்கலும் ஒடுங்க உன்னினர். அவ்வணமே ஆயது. மீட்டும் மாயா மலரகிதராய் உற்பத்தியாக உன்னினர். அங்ஙனமே ஆயது. எல்லாம் வல்ல சித்

தாகரு எதுதான் அரியது, உலகந்தாங்க மலையெட்டு நாகமெட்டு யானையெட்டு தாமேதோன்றின. ஆயிரம் பணாமுடியுடன் ஆதிசேடனுந் தோன்றினன். சிலநாட் சிலதலையாலும், சிலநாட் சில தலையாலும் பூமிமத்தியை தாங்கி தாங்கமுடியாமல் கவலையுற்றவனாய், கவலையுற்றார்க்குக் களைகணாய்த்தோன்றி கயிலையில் வீற்றிருக்கும் கண்ணுதற் பெருமானையடைந்து தனக்குற்றுள்ள கஷ்டநிஷ்டூரங்களை அறிக்கையிட்டு, நிவர்த்திகோர, அழியாமுழுமுதலாகிய ஐயனும் ஆதிசேடனை நோக்கி, மந்தகாசஞ்செய்து, அனந்த, நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை உன் ஒருதலையால் ஊழிகாறுந் தாங்கினும் உலவாவரம் தருவேம் என, ஓ அரவாபரண, அவ்வணம் செய்தருளாவிடில், அடியேன் பெற்றுள்ள "அனந்த," நாமம் இன்றோடந்தமாவது திண்ணம் என்றான். "அர" என்று ஒருக்கால் அறியாது உரைப்பவர்க்கும் அழியாவின்பந்தரவல்ல பரசிவபதியார், ஓ அரவரசே, நீ இன்றுச்செய்யவேண்டிய தொன்றுண்டு, அஃதியாதெனின்; மேருவின் தெற்கில், நாவலந்தீவில், பரதகண்டத்தில், திராவிட தேயத்தில், சோழநன்னாட்டில் கீழ்கடலுக்கு மேல்பாரிசத்தில் நான்கு யோசனை தூரத்தில், காவிரியின் றென்கரையில், கும்பகோணமென்றொரு க்ஷேத்திரமுண்டு, அந்ததலத்திற்கு, உயர்வு ஒப்பு புகலக் கிடையாது; அங்கு கும்பேசர் கூவிளவனேசர் முதலிய மூர்த்திகளாய் யாம் விளங்குகின்றோம், பின்னர்க்கூறிய கூவிளவனேசப்பேர் மேவு நங்குறியை பூசிப்பையேல், வலியும், ஒளியும், மற்றையவும் பெறுவாயென; ஆதிசேஷனும் விடையுடையண்ணலைத்தொழுது, விடைகொண்டு, குறித்ததலமே குறுகி காவிரி நதி படிந்து கூவிளவனமடைந்து, அரசதீர்த்தமாடி "அரஹர" வெனப்பாடி, ஐயனையும் அம்மனையும் பூசித்துக்கொண்டு, அங்கு பல நாட்டங்க, ஒருநாள் சிவபெருமான் நாகராஜன் பூசனைக்குகந்து, நாகாபரணம் ஆகமெலாம்பூண்டு மழுவலக்கரத்தும், மான் இடக்கரத்தும் தாங்கி, பிறைமுடிச்சூடி விடையுகைத்தேறி உமாசமேதராய் காட்சிதந்தருள, அரவரசன் உருகிய உளத்தனாய்ப் பணிவ மகிழ்ந்து வேண்டியவரத்தைவேண்டிப்பெறுவாயாகவென, ஆதிசேஷன் ஓ பரம்பர புவிதாங்கும் உரமும் உன்பொன்னடிதாங்கும் சிரமும் அடியேன் நீங்காது பெறவேண்டுமென அவ்வணமே அருளி பின்னும் [illegible]

பூசித்தது யாரும் எளிதிலறியுமாறு, இத்தலம் நாகேசம் என்றும், இத்தீர்த்தம் நாகதீர்த்தமென்றும் இம்மூர்த்தி நாகேசர் என்றும் திருநாமம்பூண்டு விளங்கவேண்டும்; சூரியர் சந்திரர் எம் உலகில் இல்லாமையால் அங்குக்குடிகொண்டிருக்கும் இருள்மாயும்படி உமது தேஜஸ் எமதுலகிற் சாரவேண்டும், உம்மை அன்போடருச்சிப்பவர் இம்மையிலெச் செல்வமும்பெற்று அம்மையில் அழியாவீடும் அடைதல் வேண்டும் என ஐயன் அப்படியே ஆகுக எனத் திருவாய் மலர்ந்து திருவுருக்கரந்தருளினர். இந்நாயனுர் முன்னேர் காலத்து உலகோராதி உய்யும் பொருட்டு தன் மூவிலைச்சூலத்தால் பூமியில் குத்த கூவம் ஒன்று தோன்றியது. அதன் பக்கத்தில் மும்மூர்த்திவடிவாகிய அஸ்வத்த விருக்ஷம் ஒன்று உண்டாயது ஆதலின் அது அரசதீர்த்தப் பெயர்பெற்றது. இதுவே இப்பால் நாகதீர்த்தம். இதில் மூழ்குவோர்க்குச் சர்ப்பத்தால் பயமில்லை. ஆதிரையில் மூழ்குதல் விசேடம். பாதலந்துலங்கவந்த இந்தப் பாதாளபீஜ நாதரோடு, உடன் தோன்றியவர், முகப்பில் விளங்கும் திருநந்திதேவர். இவரை விதிப்படி பூசிப்பவர் உறும்பயன் பெரிது.

௳

## உமாபாகர் வரலாறு.

பிர்மாவின் பெருவிரலினுதித்த தட்சப்பிரஜாபதியின் பதினுறு பெண்களில் பதின்மூன்றுபேர் யமனுக்கும் ஒருத்தி பிதிர் தேவனுக்கும், பின்னெருத்தி அக்கினிதேவனுக்கும் வாழ்க்கைப் பட்டார்கள். எஞ்சிநின்ற சதியெனும் நங்கையைச் சங்கரப்பிரபு மணந்தருளினர். சதியையும் சங்கரப்பிரபுவையும் மற்றமக்கள் மருகர்களுடன் சமானமாகவெண்ணித் தருக்குற்ற தக்ஷன் ஒருநாள் சண்டன் முதலிய மருகர்கள் வாழும் பதிகளுக்குப்போக அவர்களும் மாதுலர்க்குரிய வந்தனை வழிபாடுகளுடன் எற்று மரியாதைசெய்ய, இவ்வண்ணமே எம்பிரானும் செய்வரென எதிர் பார்த்துக் கயிலையங்கிரிக்குச் சென்றான். பிர்மாதி தேவர்கள் யாரும் கும்பிட்டு நிற்கும் கோலங்கண்டும் தடிபோல் நின்ற தக்ஷனைப்பார்த்து, நின்றூர் எல்லாரும் நறுமுறுத்தனர், எம்பிரான் முறுவல் பூத்தனர், தக்கன் மனங்கொதித்தவனுய் சற்றும்

அங்கு நில்லாமல் திரும்பிவந்து மற்றமருகர்களை அழைப்பித்து, கயிலையில் நடந்த காரியத்தைக்கேளுங்கள், சிறுவிதி யென்று பெயர்படைத்த தக்ஷன், வலிய அவனிருப்பிடம்போயும், பெரியோர்க்குரிய இருக்கையெழல், எதிர்செலல், முகமன்கூறல் முதலிய மரியாதை செய்யாமல் இறுமாந்திருந்து விட்டான், கருணையென்பது சிறிதும் இன்றி சங்கரிப்பதே தனக்குரிய தொழிலாகக்கொண்டவன்; குணங்குறி பாராமல் குலநலம் தேராமல் இவனுக்கும் ஓர் பெண்ணை என்கொடுத்தேன் என்று பலவாறுதுக்கித்தவனாய்ப் பின்னுஞ்சொல்லுவான் வாருங்கள் மருகர்களே என் மகள் சதியையும் அவள் பதி சங்கரனையும் இன்றேயொழித்து விட்டேன் நீங்களும் அவ்வணமே செய்யவேண்டுமெனச் சண்டன் முதலியோர் பலவாறு இதோபதேசம் செய்தும் கேளாதவனாய் யான் கோரியபடி செய்ய இசைந்தாலொச்சு இல்லாவிடில் உங்களையும் அவனோடு சேர்த்தொழிவேனெனக் கொதித்துக்கூறப் பொருதவர்களாய் ஓ ஐய உம்முடைய இஷ்டம்போல் நடக்கச் சித்தர்களாயிருக்கிறோம் என்று சொல்லி அவரவர் இருக்கைசேர்ந்தனர். இப்பால் தக்ஷன் ஓர் யாகஞ்செய்ய உத்தேசித்து, வேண்டிய உபகரணங்களைச் சேகரித்துக்கொண்டு காலமும் இடமுங் குறித்து மால் பிரமர், முதலாயினோர்க்கு ஓலைபோக்கி வரவழைத்து யாகஞ்செய்வானாயினன். இது செய்திகேட்ட அம்மை எம்பிரானை வணங்கி நாமும் யாகசாலைக்குப் போய்வரலாமென்றனள், தக்ஷன் நம்மிடத்தில் கடுஞ்சினம் கொண்டவனாய் இந்தயாகம் செய்கிறான் எல்லோரையும் அழைத்தவன் நம்மை அழைத்தான் இல்லை, அழையா விருந்தாய்ப்போக நமக்கிஷ்டமில்லை வேண்டுமானால் நீமட்டும் போகலாமெனவே; சதியும் எழுந்து பதியைத்தொழுது சிறுவிதியின் யாகசாலையை அடைந்தனள். அங்கு நடந்ததோ "அதிசயம் அதிசயம்"! மகள் வரவுகண்டும் சிறுவிதி மதியாதிருந்து விட்டான், தாயும் சகோதரிகளும் அவ்வணமே அவமதிசெய்தனர். சதியுங்கவன்று பதிசொற்கடந்தவள் கதியிதுமட்டோ என்று துக்கித்து அக்கினிவளர்த்து அதிற்குதித்து திருவுருக்கரந்து மழவுருக்கொண்டு இமோற்பருவதச் சாரலில், ஓர் தடாகத்தில் தாமரைமலர்மேற்கிடந்து அழ, பிள்ளையில்லாமல் பெரிதும் வருந்திக்கொண்டிருந்த, பருவதராஜன் கண்டு விருப்போடு எடுத்து, மனைவி, மேனைகையிற்கொடுக்க,

அவரும் வாங்கி அன்புடன் வளர்க்க, தக்கன் மகளெனும் தாக்ஷாயணிப்பெயர் நீங்கி, பர்வதன் புத்திரியெனும் பார்வதிப்பேர் தாங்கிப் பூரித்துவளர்ந்தவள், பண்டு நீத்துவந்த பரம்பரனைக் கணவனாக வருத்தித் தவஞ்செய்வளாயினள். இங்ஙனமிருக்க தக்கன் யாகசாலையில், அம்மை அவமதிப்புத்தாளாளாய் அக்கினிப்பிரவேசம் செய்ததமை நாரதரால் அறிந்து, ஐயன் சடையொன்றைவாங்கித் தரையில், ஓங்கியடித்தனர், அடிக்கவே மரம் மலைகள் நிலைகுலைய, கடல் நிலையற்று அலையெறிய, அண்டமெலாம் அடுக்குக்குலைய, கோபாக்கினியினின்றும் குதித்தெழுந்தான் ஒரு வீரன். எழுந்த வீரன், இறைவனைவணங்கி எனக்கிடும் கட்டளையாதென வேண்டினன். தக்ஷன்செய்யும் யாகத்தை தக்ஷணமே சென்று தகர்த்தசெய்திகொண்டு இங்குவாவென்று ஐயனளித்த கட்டளையை வீரன் தலைமீதுதாங்கி கணமேனும் தாழாமல் பூதப்படையோடு யாகசாலைபுகவே, புலியைக்கண்ட புல்வாயைப்போல் தேவர்களெல்லாம் வெருண்டோடப் பூதகணங்கள் விடாது வளைத்து கண்ணைப்பறித்தும், பல்லைத்தொலைத்தும், கரத்தைத்தறித்தும், சிரத்தையறுத்தும், மார்பைத்தகர்த்தும் பங்கப்படுத்தினர்கள். வீரனே தக்கனைத்தலையறுத்து சந்திரனை உடல்தேய்த்து அக்கினியைக் கைமுறித்து சூரியனைப் பல் பிடுங்கி யாகாக்கினியையும் கோபாக்கினியையும் ஒருசேரத்தணித்து கைலயங்கிரியையடைந்து கண்ணுதற் பரனைப்பணிந்து, நடத்திய யாவும் அறிக்கையிட, சிவபெருமானும் தன் கோபப்பிரசாதப் பெருமையை மூவுலகும் கொண்டாடும் வண்ணம், வீரனைப் பார்த்து மீட்டும் யாகசாலைக்குப்போய் தக்கனுக்கோர் ஆட்டுத் தலையைப் புணர்த்தி மற்றவர்களுக்கும் அற்ற அவயவம் உற்றுப் பொருந்தும்படி செய்துவாவென, வீரன் அங்ஙனமே செய்து கைலையடைந்திருந்தார். ஐயனும், கல்லாலின் நீழலில் கண்மூடி மௌனியாய் யோகத்தமர்ந்தார். அம்மையோ தவத்திற் பொருந்தினள். ஆதலின் உலகத்தில் உற்பத்தி நின்றேவிட்டது. இச்சமயம் சூரபத்மாதிகள் செய்தற்கரிய தவசு செய்து பெறுதற்கரிய வரத்தைப்பெற்றனராய் தேவர்களைச் சிறைப்படுத்தி ஜெகமெலாம் நடுங்கும்படியான கொடுமைகளைச்செய்துவந்தனர். தேவர்கள் கஷ்டம் பொறுதவர்களாய் வைகுந்தத்தையடைந்து மகாவிஷ்ணுவுக் கறிக்கையிட்டார்கள். அவர் மனங்கவன்று சிறிது

தேறிச் சொல்லுகிறார், ஓ தேவர்களே நாம் தகாது செய்த தக்ஷனைச்சார்ந்த குற்றத்தின் பயனுக்குமிது, நாம் செய்தபிசகுக்கு இது போதாது இவ்வளவோடு நிறுத்தியது ஈஸ்வரனுடைய பெருங்கருணையே. இதுநிற்க; உங்களுக்கிடையூறுன சூரனுக்கிடையூறாய் சுப்பிரமணியன் தோன்ற வேண்டும், சுப்பிரமணியன்தோன்ற சங்கரப்ரபு யோக நீங்கவேண்டும், யோகத்தை நீக்க காமனம்பே தக்கது என்று சொல்லி காமனை வருகவென்றெண்ணினர். அங்ஙனமே அவரும்வந்து அடியேனை அழைத்தகாரியம் என்னென வினவ சிவயோகம் சிதைத்திடவேண்டுமெனக்கேட்ட காமன் என்னசொல்லியுங் கேளாதகாரணத்தால் உடன் பட்டுப் பாணந்தொடுத்தனன், பாணம் பரம்பரனுடலிற்படவே பாலநேத்திரம் திறந்தது காமன் கண்ணழலால் சாம்பராயினன், இதுதான் மிச்சம், எம்பிரான் யதாப்பிரகாரம் யோகங்கூடினர். இப்படி வெகுகாலஞ்சென்றபின் அண்ணலும் அவராக யோகநீங்கி அம்மையை நினைந்து அவரிடம் ஓர் விருத்தவேதியராய்ச் சென்று அங்கோர் சிறு திருவிளையாட்டயர்ந்து பின்னர் தன்னுருவைக் காட்டி பருவதராஜன் சம்மதிபெற்று, பார்வதி தேவியாரை பாணிக்கிரகணஞ்செய்து கயிலையங்கிரியையடைந்து அமருநாளில், அம்மை பிரிந்துறைந்தகாலமும் கஷ்டமும் ஞாபகத்துக்குவர ஐயனைப்பணிந்து தன்னை ஒருபாகத்தில் பிரியாது அமர்த்திக்கொள்ளவேண்டுமென அங்ஙனமே வாமபாகத்தை வழங்கியருளினர். ஆனதுபற்றி அந்நாள் தொட்டு நாயனுருக்கு மடந்தைபாகரெனப் பேர் உண்டாயது. இதுநிற்க; சுப்பிரமணியர் தோன்றிச் சூரனாதியரைச் சம்ஹரித்து தேவர் சிறைமீட்டருளினர். பிர்மாதி தேவர்கள் கயிலையையடைந்து,

“ அராவணி சடையாய்போற்றி அறப்பெரு விடையாய்போற்றி ... ...*
விராமழுப் படையாய்போற்றி வெய்யதோ லுடையாய்போற்றி... ...*
பராவரு ணடையாய்போற்றி படுதலைத் தொடையாய்போற்றி ... ...*
யொராமறை யிடையாய்போற்றி யுமையொரு புடையாய்போற்றி. ”*

என கண்ணுதற் பிரானைத் தோத்திரஞ்செய்து ஒன்று வேண்டுகின்றார். தேவரீர் திருவருட்பெருக்கால் அடியேங்களுக்குற்ற இடுக்கண்கள் யாவுந்தொலைந்தன, தேவரீர் திருநடங்காண விருப்பம் மிக உண்டாயிருக்கிறது, அந்தமனோரதம் நிறைவேற அருள் புரியவேண்டுமென்றார்கள். இந்தமனுவை ஏன்றேம், இப்பொழு

தேபுறப்பட்டு கும்பகோணத்தலத்தையடைந்து காவிரி முதலிய தீர்த்தங்களிற்படிந்து கும்பேசர் முதலிய மூர்த்திகளைப்பணிந்து நாகேசர் சந்நிதியிற் காத்திருங்கள். நாம் அங்குவந்து நடம்புயில் வாம் என்றனர். அவர்கள் அவ்வணமேசெய்து காத்திருந்தனர். சிவபிரானும் சிவைசகிதமாய் திவ்விய விமானமொன்றேறி திருக்கயிலையைவிட்டுத் திருக்குடந்தையை அடைந்து வில்வவனேசர் சந்நிதிப்படவே விமானம் செல்வதொழிந்து நின்றது. அவ்விமானமே சிற்சபையாக, உமையவள் தாளமிட, கணபதி முழவொலிக்க, விஷ்ணு வேணுகானம் செய்ய தும்புரு நாரதர் சங்கீதம் பாட தமருகம் ஒருகரத்தினும் தழல் ஒருகரத்திலும் முழங்க, ஒருகரங்கவிய ஒருகரம் அபயமளிக்க, புயத்தில் அரவாபரணமும் சிரமாலிகையும் தொங்க, கொன்றைமாலை வாசம்வீச சடைநிமிர்ந்து ஆட பிறை நிலவு கால கங்கை பொங்கிவழிய மங்கைபங்கிலமர புலியதள் அரைக்கசைத்து ஊன்றிய பாதம் முயலகன்முதுகிலும், தூக்கிய பாதந்தேவர்கள் விழியிலும் நிற்க; ஞான நிர்த்தனம் செய்தருளினார். தேவராதி, திருநடங் கும்பிட்டுய்ந்தோம், எம்மைப்போல் யாவரும் உய்யுமாறு இங்கு இவ்வணமே எந்நாளும் நடம்புரிதல் வேண்டும் என வேண்டிக்கொள்ள அங்ஙனமே ஆகுக என, இன்று மார்கழித் திருவாதிரையாதலால் இந்த நாளில் தேவரீர் திருநடங்கண்டவர் இம்மையில் எப்போகமுந் துய்த்து அம்மையில் சிவலோகமாள்விக்கவேண்டும் என அப்படியே ஆகுகவெனச் சிவபெருமான் திருவாக்களித்தனர்.

௨

## சூரியன் பூசை.

மலர்தலையுலகின் மல்கிருளகல இலகொளி பரப்பி யாவையும் விளக்கும் பரிதிவானவன், துவட்டாவின் புத்திரி, சஞ்சையை மணந்தான். அவள் சண்டன், காளிந்தி என்றிருவரைப்பயந்து, சூரியன் கிரண உஷ்ணம் பொறுளாய், தன்னிழலைப் பெண்ணுருவாக்கி, நாயகர்பாங்கர்வைத்து, பிள்ளைகளிருவரையும் அவ்வசம் ஒப்புவித்துவிட்டு, தன்பிதாவினிடம் சேரவே, வந்தவகைகேட்ட பிதாவும், ஏதுதுயரம் உறினும், பதியைவிட்டு விலகுதல் பதிவிரதைக்கழகன்றெனச் சீறியடிக்க, புருஷன்பாற் செ

ல்வதாகச்சொல்லி, மந்திரகிரிச்சாரலில், பெண்குதிரையாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவள் விட்டுப்போன சாயையைச சஞ்சைதானென்றெண்ணிச், சூரியன் கூடிவாழுநாளில், சாயைவயிற்றிற் சனிதோன்றினன். இம்மூவரும் ஒருதாய் வயிற்றில் தோன்றியவர்கள் போல வாழும் நாளில் எப்படியோ மாற்றுத்தாய்ப் பகைவெளிப்பட்டு, பிள்ளைகள் மயிர்பிடித்து இழுத்துச் சண்டைபோட, சூரியன்கண்டு கவன்று, ஒருவயிற்றிற் பிறந்தவர்கள் மாற்றுத்தாய் வயிற்றுதித்தவர்கள்போல வம்பளத்தல், ஆச்சரியம் என்றுசொல்ல, சாயைசிரித்து சங்கதியை ஆதியோடந்தமாய்ச்சொல்ல, மாதுமானுருக்கொண்டு திரியும், மனைவியை நாடித்தினகரன் சென்றனன். மனைவியும் கணவன் வரவு கண்டு நடுக்க முற்றவளாய், முன்னைய பெண்ணுருவெடுத்து, பிதாவின் இருப்பிடம் சென்றாள்; கதிரவனும் தன்னுருவெடுத்து, பின்றொடர மாதுலன் கண்டு, மருகனைக்கட்டித் திருகுசாணையிற் பிடிக்க கதிரெலாம் மழுங்கி, மதியம்போலாகி மதிகலங்கி, வாய்விட்டலற, ஓ கதிரவ, நீமதிமாழ்கேல், கும்பகோணத்தையடைந்து, நாகேசம் என்னும் தலத்தருகில், தீர்த்தம் ஒன்றுண்டாக்கி, மூழ்கி நாகேசனைப பூசிப்பையேல், சிந்தியகிரணங்கள் எல்லாம் வந்துறும், சஞ்சையும் தக்கபலமுண்டாகி உன்னுடன் உற்றுமகிழ்ந்து வாழுவள் என்று, ஒரு அசரிரிவாக்குப் பிறக்க, அப்படியேசென்று தீர்த்தங்கண்டு, மூழ்கி நாகேசமூர்த்தியைப் பூசித்து வேண்டிய உரமும வரமும் பெற்றான்.

இது முதல் இத்தலத்துக்கு பாஸ்கரக்ஷேத்திரம என்னும் பெயருண்டாயது. அங்குண்டாய தீர்த்தம் சூரியபுஷ்கரணி. இதில் ஸ்நானம் செய்ய பானுவாரம் விசேஷம.

உ

## பகவதீர்த்தம்.

திருமறைக்காட்டில் பகவனென்றொரு வேதியர் இருந்தார். அவர் நிகமாகமங்களில்நிபுணர். விதிவழிவழாதுநடப்பவர் சிவமே பரமெனத் தேறினவர். இவர் அன்புதான் என்ன அன்பு! என யாவருங்கொண்டாட இருக்குங்காலையில்; அவர் தாயர் இறநதனர். அன்னைக்குரிய கடன் அனைத்தையும், பின்னமறச்செய்ய

வெண்ணித் தகனசஞ்சயனாதிகள் முடித்து, எலும்பை விதிப்படிக் குடத்தில் சேமித்து, கங்கையில் சேர்க்கக்கருதினராய், ஒரு சிறுவனை உதவிக்கழைத்துக்கொண்டு புறப்பட்டு, மார்க்கத்தில் தென்படும் தலங்களையடைந்து, தீர்த்தங்களில் படிந்து, மூர்த்திகளைப் பணிந்து போகும் நியமம் பூண்டு செல்லுவார், கும்பகோணத்தையுற்றுக் காவிரியின் நாகேசர் திருமஞ்சனத்துறையில் ஓர் மரத்தில் என்புக்குடத்தைத்தூக்கிட்டுச், சிறுவனைக்காவல்வைத்து, காவிரிபடிந்து கூவிளவனேசராதியரைப்பணிநது, வருமுன்னர், சிறுவனுக்குப பசிமேலிட, மேலேகட்டிய குடத்தில் ஒருவேளை தின்பண்டம் ஏதேனும் இருக்கலாகாதா, என்று எண்ணி அதை அவிழ்த்துப்பார்க்க, அக்குடம் அன்றலர்ந்த தாமரைப்பூக்களால் நிறைந்திருக்கக்கண்டு, பசிக்குதவாப்பண்டம் எதுவானால் தான் என்ன என்று, முன்போலக் குடத்தைச சேமித்துத் தூக்கிட்டு இருந்தான்.

அந்தணர்வந்து, குடத்தை எடுத்துச் சிறுவன் பின்றொடர, வடக்குநோக்கிக் காடுஞ் சுரமுங்கடந்து, காசியையடைந்து, கங்கையிற்படிந்து, அங்கக்குடத்தை யவிழ்த்தார். சிறுவன், உள்ளிருந்த வஸ்து, முன்னுக்குப்பின் விரோதமாயிருக்கக்கண்டு அந்தணர் இடத்தில் முந்தித் தான்கண்ட அற்புதக்காட்சியைச் சொல்ல, ஏடா, அப்போதே ஏன் அறிவிக்கவில்லையென, அடிப்பீர் என்று பயந்தொழிந்தேன் என்றான்; கண்டது உண்மைதானோவெனப் பன்முறைகேட்டு உறுதிகொண்டு, பழையபடி குடத்தையெடுத்துக் குடந்தைபோய்ச்சேர்ந்து, அவிழ்த்துப் பார்க்க, அற்புதமலர்கள் கண்டு, ஆனந்தங்கொண்டு, அவற்றைக் காவிரித்துறையில் விதிப்படி விடுத்து, வேண்டுவன செய்து, அந்த இடத்திலேயே மடந்தைபாகரை மனதில் குறித்து, நிட்டைகூடினர். அய்யனும் முன்வந்து, அந்தண சிகாமணீ, வேண்டியதியாதென வினவினர். அந்தணர் எழுந்து பணிந்து, அடியேனை உம் அடிக்கமலத்திற் சேர்த்தல் வேண்டும்; எலும்பு நறும்பூவாகிய இத்துறை என்பேரால் விளங்கவேண்டும், இதில் பக்தியுடன் படிந்தாடுவோர், இஷ்ட போகங்கள் துய்த்து, முத்தியடைதல் வேண்டும், எனக் கேட்க, வேண்டியார், வேண்டியவாறே விரும்பியளிக்கும் அய்யன், அங்ஙனமேயளித்து, மறைந்தருளினார். அன்றுமுதல் இத்தீர்த்தம் **பகவதீர்த்தமாயது.**

இத்தீர்த்தத்தின் பெருமை யாவராலும் சொல்ல இயலாது. ஆயினும் ஒரு மகத்துவம் ஈண்டுக்கூறுவாம்.

மகததேயத்தில், சந்திரகுலத்தில், சத்தியக்கீர்த்தி யென்றோர் அரசன் இருந்தான். அப்பெயர் அவனுக்கேதகும் என அரசுபுரிந்தான். அவன் சிவபத்தியிற் சிறந்தவன். ஒருநாள், நித்திய கிருத்தியமுடித்து, வெளிப்பட்ட சமயத்தில், "ஐயகோ" "ஐயகோ" என்று ஆகாயத்தில் பிறந்த, சப்தத்தை அரசன் நின்று இஃதென்னவென்று உற்றுக்கேட்க, "யானொரு பிராமணப்பெண், பெண்புத்தியாற் சில பிழைகளைச்செய்து விட்டேன், அப்பாதகம் சுற்ற ஓர் பிரமராக்ஷசு என்னைக் கழுத்திற்சுருக்கிட்டு ஆகாயமெல்லாம் இழுத்தடிக்கிறது, என்னைப் பாதுக் காப்பாயேல் அநந்தம் பலன் கிடைக்கும், பராமுகம் செய்யிற் பெரும் பாதகத்துக்குள்ளாவை" என்றலறிய சப்தமாயிருந்தது சத்தியகீர்த்தி பக்கத்து நின்ற, வேதசன்மப்பேர் வேதியரைப்பார்த்து, இவருக்குண்டாய துன்பத்தை, எம்பிரான் திருவருட்பலத்தால் இப்போதே மாற்றுவன் என்றனன். வேதியன் திடுக்கிட்டு, இது என்ன ஆபத்து, இவள் விர்த்தாந்தங்கள் இன்னவென்று தெளியாமல், விரைந்து வாக்களித்தீரே; இவள் பூர்வம் ஓர் பிராமணப்பெண், கணவனொடு அரும் போகந்துய்க்குங்காலையில், ஏதோ அவன் இளையாள் ஒருத்தியை மணந்தான்; இதுகண்ட இவள் தன்னையே சார்ந்திருக்கும்படி, என்னவோ மருந்திட்டாள்; இதனால் இருமல்கண்டு கணவன் இறந்தான்; இளையாளும் உடன் கட்டை ஏறி உயிரைத்துறந்தாள். இவளோ, உற்றநட்டத்தை, நட்டமாக நினையாது, மஞ்சள், குங்குமம், மாறாது பூசி, காமுகியாய், கண்டவருடன்கூடி நோயுற்றுக் கடைசியாய் இறந்து வெய்யநரகில் வீழ்ந்துழன்று, அப்பால், பன்றி, நாய், கழுதை முதலிய பல ஹீன ஜன்மம் எடுத்து, ஏதோசொல்ப புண்ணியவசத்தால் உன்தேயத்தில் பின்னும் ஓர் பிராமணப் பெண்ணாய்ப்பிறந்தாள்; பாவசேஷம் பற்றவே, பிரமராக்ஷசு பிடித்தலையுண்ணுவாள், இவளுக்கு இட்டகெடு ஆயிரம் வருஷம், முந்நூறுகழிந்தது, பின்னும் ஏழுநூறுகழிந்தாகவேண்டும்; இப்படியிருக்க இவளை யெப்படி நீர் இப்போதே காப்பது என்றான். எவ்விதம் செய்தாவது, என்வாக்கைப் பூர்த்திசெய்யவேண்டும் என்று அரசன்சொ

ல்ல, வேதியர், ஓ சத்திரியசாந்தனு, இன்னது செய்தால், உன்ன துசாதிக்கலாம்; இஃதியாதெனின், சோழதேசத்தில் குடந்தைத் தலத்தையடைந்து, என்பு தாமரையாகிய, பகவதீர்த்தத்தில் மூன்றுநாள் விதிப்படியாடி, அந்தஸ்நானபலனை இவட்குத் தத்தம் செய்தால் அவள் ஈடேறுவள் என்றான். அரசனும் அரைக் கணமும் தாழாது, அங்ஙனமே செய்யப் பாதகத்துக்கெல்லாம் உறையாணியாயிருந்த அபபார்ப்பனி, புனிதையாகிச், சிலநாள் அங்குவைகி, அந்நீராடி, விண்ணுலகுற்றிருந்த, தன்னருங்கண வனையடைந்து சொர்க்கபோகம் துய்த்தனள். தீர்த்தத்தின் மகி மையைப், பெயர்த்தும் சொல்லவேண்டுமோ, வேண்டாம்.

உ

கணபதிதுணை.

## காசிவிஸ்வநாதர் வரலாறு.

விருத்தம்.

உருவமா யருவமாய் மறறுபயமா யுன்னுவார்தம் ... ... ... ...*
திருவமாய் புவியாய் நீராய் தேயுவாய் வாயுவாய்மேற்...... ...*
பருவமார் வெளியா யொன்றிற் படாததாய்ப் பரந்துநின்ற ...*
பொருவரும் விஸ்வநாதர் வரவினைப் புகலலுற்றாம். .. ... ...*

உருவாகி யருவாகி, உருவருவாகிச், சிந்திப்பவர்க்குக் குறை யாச் செல்வமாகி, பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என் னும் ஐம்பூதமாகி, ஒன்றிலும்படாமல், எங்கும் பரந்து நிற்கும் ஒப்பற்ற விஸ்வநாதர் வரலாற்றைச் சொல்லுவாம்.

எப்புவனத்தவரும், தாம் தாம் இயற்றும் பாவங்கள் அனைத் தையும் போக்கடிக்கும் புண்ணியநதிகள் ஒன்பது; அவையாவன. கங்கை, யமுனை, கோதாவிரி, நருமதை, சரஸ்வதி, காவிரி, கன் னியாகுமரி, பயோட்டினி, சரயு என்பனவைகளே. இவ்வொன்பது நதிகளும், ஒன்பது கன்னிரூபமுடையவர்கள். இவ்வொன்பதின் மரும், தம்மிலாடியோர் கழித்தபாவத்தைத் தாங்கமுடியாதவர்க் ளாய், ஓரிடத்தில் கூடி, என்னசெய்தாற் பிழைப்பெய்தலாம் என்று யோசித்து, திருக்கைலாயத்தையடைந்து, இவ்பெருமானை நமஸ்கரித்து,

யாம்படும்பாடு சிவனேயுலகர் நவிலும் பஞ்சு ... ... ... ... ... ... ... *
தாம்படுமோ சொல்லத் தான்படுமோ எண்ணத் தான்படுமோ...... *
என்று முறையிட்டனர்.

தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான் உமக்குற்றது யாதெனவினவ, முப்புவனத்துள்ளாரும் எம்மிற்படிந்தாடிக் கழித்தபாவம் எம்மைவிடாது பற்றிவருத்தா நிற்கும்; இதற்கு விமோசனம் தெரிய இல்லை; தேவரீரே தெரிவித்தருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ளக், கேட்டருளிய சிவபெருமானும் புன்னகைகொண்டு, கன்னியரைநோக்கி, நீவிர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; கும்பகோணம என்று ஓர் தலமிருக்கிறது; அது நமது வெள்ளியங்கிரியினும் மிகசசிறநதது; அத்தலத்தின் தென்கிழத்திசையில், ஓர் தீர்த்தமுள்ளது; அதில் சிமமராசியில் குருவிருக்கும் வருஷதது, மாசிமகத்தில் ஆடிஞா பாவம் அனைத்தும் பறந்தோடும்; நாம மேறகுறித்த புண்யகாலமும், அதிசமீபத்தில் இருக்கிறது; ஆதலால் அவ்விடம இப்போதே சென்று அத்தீர்த்தமாடுவது அவசியம் என்று சொல்லியருள, கன்னியர்கள் கேட்டு ஆனந்தித்து, அவரை நமஸ்கரித்து, ஐய்ய, யாஞ்செய்வது இன்னும் ஓர் விண்ணப்பம் உண்டு; அஃதியாதெனில், தேவரீர் குறித்த தலமும், தடமும் யாமறியோம்; விவரம்தாமே தெரிவித்தருளவேண்டும் என்றார்கள். ஆண்டகையும், அவர்மனுவைத் திருசசெவியில் ஏற்று "ஓ நதிகன்னிகைகளே" நீவிா, எல்லீரும் காசியையடைந்து, காத்திருங்கள், யாஞ்சீக்கிரமேவந்து, உம்மை யழைத்துக்கொண்டு, குறித்ததலம் போய்ச்சேர்வாம் என்றார் கன்னியரும் அங்ஙனமேசெய்யச்,சிவபெருமான் சீககிரம் சென்று, கன்னியரையழைத்துக்கொண்டு காசியைவிட்டுப், பூதகணங்கள் புடைசூழக், தேவகணங்கள் துதிபாடக் கும்பகோணத்தையடைந்து, கும்பேசராதிச் சிவகுறிகளை வணங்குவித்து, மாகஸ்நாடச்செய்து,வடகரையில்,அவர்களோடு அமர்ந்தருளினர்.

உ

## காரோணவரலாறு.

இங்ஙனம், மாமகதீர்த்தத்தின் வடகரையில் வீற்றிருந்தருளிய விஸ்வேசர், காரோணராண வரலாற்றும் கூறுவாம்.

பூர்வம் அயோத்தியில், அறுபதினாயிர வருஷம் அரசு புரிந்த தசரதன், மகப்பேறின்றி, வாட்டமுற்றவனாய், வதிட்டரை வேண்ட, அவரும் கலைச்சிருங்கமுனியைக்கொண்டு, புத்திரகாமேட்டி யாகம் இயற்றுவித்தார். பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமாவே தசரதன் மகவாய்த்தோன்றி, ராமநாமம் பூண்டு, தம்பியர் மூவரோடு வதிட்டர்பால் கலையனைத்தும் தேர்ந்தனர்.

தாடகையை வதைத்து, யாகத்தை முடிப்பிக்கக் கௌசிகர் வந்து, தசரதனைவேண்டி,ராமரை அழைத்துக்கொண்டுபோகவே, ராமரும் அரக்கியை வதைத்து, மகத்தைமுடித்து, கல்லை நடத்தி, வில்லைமுறித்து, மிதிலைக்கிறைவன் புதல்வியை மணந்து, தம்பியர் மூவர்க்கும், நங்கையர் மூவரை மணம்புணர்த்தி, தன்னகர்க்கேகும் வழியில், மழுக்கையிராமன், தருக்கையழித்து, அயோத்தியையடைந்தார்.

பரதர் சத்துருக்கனராகிய தம்பியர் இருவரும் கேகயநாட்டில் மாதுலன் மனைக்கேகினர். இச்சமயம் சிறறன்னை தம்மிடம் வந்து தம்பி பரதன் நாடாள என்றாள்; உடனே நம்பி இராகவன் காடாளச்சென்றார். தந்தை தசரதனும் வானாளச்சென்றார். இப்பால் எஞ்சிய தம்பி இலக்குவனும சீதையும் தனைத்தொடரக்காட்டினூடே செல்லும் இராகவன், குறுக்கிட்டுத்தடுத்த கங்கையைக்கடக்க, நம்பிகுகனோடு தம்பியுறவாடி, நற்றவர்வாழும், சித்திரக்கூடம் சேர்ந்து, அங்குசசிலநாள் தங்கியிருந்தார். மாதுலன்பாற் போயிருந்த பரதன், அய்யன் இறந்ததும், அண்ணல் துறந்ததும் கேட்டு, அயோத்தியையடைந்து, தந்தையுடலைச்சேமித்து, இந்தக்கொடுமைக்கு உரியதாயைக்கடிந்து,பெரிய தாயை இரந்து, அண்ணலைக்காண அரணியஞ்சென்றவன் அழுதகோலத்துடன் வரக்கண்ட ராமமூர்த்தி, அன்புரிமைகாட்டித் தம்பியரைத்தேற்றி, பாதுகையளித்து ப்பதிபுகவிடுத்து, அப்பால் சென்று வழிதடுத்த விராதனைவதைத்து, கிராதகி சூர்ப்பனகையைச்சின்னப்படுத்திக், கரனைமாய்த்துக், கடிதுசெல்லுகையில், இராவணன் மாயமானைவிடுத்துச், சீதைமானை யெடுத்துப் போயினன்.

இப்பால் ராமர், மாறுத்துயர்பூண்டு வழிநடக்கையில் தாதை யுறவுபூண்ட சடாயு, ராவணனால் மாண்டமைகண்டு அவர்க்காற்றுஞ் சடங்காற்றி, கவந்தனைமாய்த்துச, சவரிபூசை யேற்று, தராதலம்புகழ, மராமரம் துளைத்து, மாருதிகூட்சியால், வாலியைக்கொன்று, சுக்கிரீவனைத் துணைகொண்டு, தென்னிலங்கைத் திசையைநோக்கிச் சென்றனர். மார்க்கத்தில் கும்பகோணத்தையடைந்து, கும்பேசராதியரைப்பணிந்து, அச்சமயம் அங்குத்தங்கியிருந்த, அகஸ்தியரைவணங்கினர். கும்பமுனியும் ஆசிகூறி, வந்தகாரியம் யாதெனவினவ ராமர், முனிபுங்கவ என்பால் இன்னதீங்கிழைத்துசசென்ற இராவணனை மாய்க்கவேண்டும், ருத்திராம்சம் பெற்றால் ஒழிய இது சாதிக்க இயலாது ஆதலால், எவ்விதமும் உருத்திராம்சம் யான் சிறிது பெறும்படி செய்வித்தருளவேண்டும் எனக், குறுமுனிவர் கூறுவார். ஓ ரகுநந்தன, யாதொன்றுபெறக் கருதினோமோ, அதை யெவ்விதமும் பெற்றேதீரவேண்டும்; அது எவ்வணம் கைகூடுமெனக் கவலைவேண்டாம்;

எல்லாத் தலங்களினும் ஏற்றம் விசுவேசம் ... ... ... ...*
எல்லாத் தீர்த்தங்களிலும் ஏற்றம் மகதீர்த்தம் ... ... ...*
எல்லா மூர்த்திக்கும்மிக ஏற்றமுளதிம் மூர்த்தி... ... ...*

ஆதலின் இத்தலத்துச் சிலநாள்வைகி அத்தீர்த்தத்திலாடி, இம்மூர்த்தியைப் பூசிப்பையேல், சிந்தித்தயாவும் வந்து கைகூடும்; உருத்திராம்சம் பெற்றுப், பெருத்தவலியையுற்று; உன்னெண்ணப்படி முடித்துக்கொள்ளலாம், என்றார். ராமர் அவ்வணமே செய்ய, சிவபெருமான், பூசனைக்குகந்து, பத்திக்குமெச்சி, நேரில்வந்து, வேண்டியது யாதெனவினவ, ராமர், எனக்குவேண்டியது, உமது அம்சம் சிறிது என, அவ்வணம் தந்துமறைந்தனர்.

இப்பால் ராமர் குரக்குப்படையுடன், அரக்கனூர் நோக்கிச் சென்று, கடலைக்கடக்க, அணையொன்றமைத்து, இலங்கையுட் சென்று, இராவணனைக்கொன்று, பெண்சிறை நீக்கி தன்குறை போக்கி, மீண்டும் கும்பகோணத்தையடைந்து, எம்பிரானைப் பணிந்து, தம்பதியிருவரும், தம்பியருடனே, தம்பதிபுகுந்து, தம்பியுயிர்காத்துச், சடைமுடி நீக்கி, மணிமுடி தூக்கி, இனிதாக உலகாண்டார். ராமருடைய காயத்தில், தன் உருத்திராம்சத்தை ஆரோகணித்த காரணத்தால், காயாரோகணப்பேர், காசிவிஸ்வ

காதருக்கு வந்தது; இப்பால் காயாரோகணர், காரோணர் என மருவியது. ( ஆரோகணித்தல்=ஏறச்செய்தல். )

௳

## அபிமுகேசர் வரலாறு.

மாயாமய குடத்தின், வாய்மீதிருத்திய நாளிகேரம் வீழ்ந்த இடத்தில் ஓர் இலிங்கம் தோன்றியது. இவ்விலிங்கம், நாளிகேரேசர்; இத்தலம், நாளிகேரேசம். ( நாளிகேரம்=தேங்காய். ) இப்பால் நதிகன்னியர்கள், மாகஸ்நாடவந்த காலையில் அபிமுகமாயிருந்து காட்சிதந்தருளிய காரணத்தால் அவர் அபிமுகேசர் ஆயினர். ( அபிமுகம்=மேற்குமுகம். ) அம்மைபேர் அமுதவல்லி. இத்தலமகத்துவம் மிகப்பெரிது, ஊமைபேசியது, உடற்குட்டம் நீங்கியது என்றால் மேல் என்னபேச்சு.

காஸ்மீரதேயத்தில், சுதபன் என்றொரு வேதியர். அவருக்குச் சீலவதியென்றோர் மனைவி. இவ்விருவர், பலநாள் நோற்று, ஒருபெண் மகவை யீன்றனர். இம்மகவின் பேர் சுமதி. அவள், கடிமணப்பருவம் அடைந்தகாலையில், கொடியவிதி வசத்தால், தொழுநோயடைந்து, கரசரணங்கள் அழுகி, உற்றார், பெற்றார், யாவரும் வெறுக்குங்கதியடைந்தனள். வேதியர் மிகக்கவன்று, சிவபெருமானை நோக்கித் தவம்புரிவாராயினர். எம்பிரான் திருவருளால், நாரதர் அங்குற்று இத்தொழுநோய் தவத்தால் தீருநோய் அன்று; கும்பகோணத்தையடைந்து, கும்பப்பூரணையில மாக தீர்த்தத்திலாடி, நாளிகேரேசரைப் பூசித்தால் தீரும் என்றனர். வேதியர் உடனே புறப்பட்டு மனைவி புதல்வியுடனேகிவர, கும்பகோணத்தையடைந்து, மாசிமகத்தில் மகதீர்த்தம் ஆடி, அபிமுகேசரைப்பூசித்து, அன்றிராத்திரி அளப்பரிய கவலையுடன், ஆரியர் படுத்துறங்குகையில் அபிமுகேசர் கனவிற்றோன்றி, ஓ அந்தண உன் கவலையையொழி; உன் மகள் சுத்தமாயினள்; இவளை நிறையப்பூட்டி, மணமகன் ஒருவனை வருத்தி, நமது முன்னிலையிலேயே, மணம்புணர்த்துவையேல், உனக்குத் தீர்க்கதவன் என்றொரு புத்திரன் உதிப்பன்; அவனுடன் சிலநாள் வாழ்ந்து; நமதுலகம் அடைவாய் என்றனர். வேதியன் விழித்தெழுந்து, புதல்வியைப்பார்க்க, அவள் முற்றிலும் சுத்தமாயினளுமகண்டு,

மிகமகிழ்ந்து, விடியும்முன் னெழுந்து மகதீராடி மாதேவ்வரை வணங்கிச் சிலநாள்கழித்து, ஒருநாள் பிரமசாரி ஒருவனைத்தேறி, அபிமுகேசர் சந்நிதியில், அலங்கார கன்னிகாதானம் செய்தனர். பார்வதிமனோகரன் திருவருளால் தீர்க்கதவன் தோன்றினன். மூன்றுவருஷம் ஈண்டுவசித்து விடைபெற்றுப் பூமிவலமாகப் பிறந்த ஊர் போகும்வழியில் சுதன்மனென்னும் மகததேயத்தரசன்கண்டு வணங்கி சுவாமி நீவிர் எங்கிருந்து எங்குற்றீர் என வினவ தன் விருத்தாந்தத்தை வேதியர் சொல்லக்கேட்டு, அரசன் தனது ஊரும்பேரும் கூறி தன்னொரு ஊமைப்பிள்ளை பேசும்படித் தான்செய்த முயற்சியனைத்தும் பயன்படாமையை எடுத்துக்கூறி என்செயலாமென வேதியர் ஓ ராஜசேகரா அமுதவல்லி மகிழ்நன் கடைக்கணிப்பே இவ்வரும்பிணிக்கு மருந்து என்றுசொல்லி விடைபெற்று நடையுற்று வீடுசேர்ந்து சிலநாளில் அழியாவீடுமடைந்தனர். இங்ஙனம் சுதமன் தன் மனைவி காந்திமதியைப் பிள்ளையுடன் அழைத்துப்போய் மாகதீர்த்தமாடி மாதேவரைப்பூசிக்க மகன்குறைநீங்க, அரசன் அபிமுகேசருக்கு அணிவிழாநடத்தி, அருஞ்சிறப்புசசெய்து நந்தாமகிழ்ச்சியுடன் சொந்த தேசம்போய்ச சுகமாகவாழ்ந்திருந்தான்.

உ

## கவுதமேசர் வரலாறு.

திரேதாயுகத்தில், கௌதமர் என்றோர் முனிவர் இருந்தார். அவர் கல்வியால், நல்லொழுக்கால், கருணையினுல், சீலத்தால், தன்னையே தாநொத்தவர், பரசிவபத்தியிற் சிறந்தவர், வேதசாரமாகிய விபூதிருத்திராக்ஷங்களை விதிப்படியணிபவர், பக்திசிரத்தையுடன் பஞ்சாக்ஷரத்தைச் செபிப்பவர். இவர் மருவியகாதல் மனையாளும் தானும், இருவரும் பூண்டீர்த்து, இல்லறச் சகடத்தைச் செவ்வனே நடத்தினவர். எத்தனை பேர் வந்தாலும், அத்தனைபேரும் மகிழும்படி, சலியாது அன்னமிட்டு, அகமகிழ்பவர். இத்தகைய தம்பதிகள், தலயாத்திரை விஷயமாய்ப் புறப்பட்டு, திருக்கோகரணம், திருக்கேதாரம், திருக்காசி, திருப்பருப்பதம், திருஇந்திரநீலம், அநேகதங்காவதம், சோமநாதம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருப்பாசூர், திருவொற்றியூர், திருமயிலை,

திருமுல்லைவாயில், திருவான்மியூர், திருக்கச்சூர், திருவிடைச்சுரம், திருவெண்பாக்கம், திருக்கழுக்குன்றம், திருவேகம்பம், திருமேற்றளி, திருவோத்தூர், பனங்காட்டூர், திரு ஆமாத்தூர், திருக்கோவல், திருவெண்ணெய்நல்லூர், அண்ணாமலை, விருத்தகிரி, திருவதிகை, திருப்பாடலவனம் முதலாய தலங்கள் தரிசித்து, தில்லையையடைந்து, திருநடங்கும்பிட்டு, அங்குச் சிலநாட்டங்கி அந்தணர்க்கு அன்னமிட்டுச் சந்தோஷிப்பாராயினர்.

தலயாத்திரைசெய்யுந் தவசிக்கு உலவா அன்னமிட்டு உவப்பித்தல், எவ்வணம் கூடியதெனில், தம்தபோபலத்தால், தாம் சேருமிடத்துள்ள நெல்வயல்கள், அரிசியாக விளைந்தன. அதனால் அந்தணர்க்குக் குறைவின்றி அன்னம் படைக்கும் திறம் அவர் படைத்தார். இப்பால் தில்லையைவிட்டுச் சீர்காழியையடைந்தார். அவர் அங்குற்றசமையம், அன்னம்படைக்கும் திறத்தை அளவிட்டுப்பார்க்கும் சமையமாய் இருந்தது. செவ்வாய்க்குச் சூரியன் முன்னிற்க, சுக்கிரன்பின்வந்ததால், துவாதசவருஷக்ஷாமநேரிட்டது. வெகுசந்தோஷத்துடன் மேகங்கள் மெய்யிளைப்பாற ஏகின. வானின் மழைத்துவாரம் அடைபடவே யானைமதத்துவாரமும் மாதர்முலைத் துவாரமும் அடைபட்டன. மேகத்தின் பேரெல்லாம் லோபமாய்போயினவாம். " கந்தரம் " என்றால் " கழுத்து " என்பாரேயன்றி, " மேகம் " என்பாரில்லை; "பயோதரப்" பெயர் "புயல்" பொருளற்று, "முலை"ப்பொருளே பெற்றதாம். " முகில் " ஏட்டிலேயன்றி, மோட்டில் இல்லை; (மோடு=முகடு=உச்சி.)மலையில் அருவியற்றது, வனத்தில் ஆறு அற்றது, வயலிடையில் ஓடையற்றது. குறிஞ்சித்திணையென்ன, முல்லைவரகென்ன, * மருதநிலநெல்லென்ன, மருந்துக்கும்கிட்ட இல்லை, நெய்தநிலப் பொருள்மட்டும் நெடும்போராய்க்குவிந்ததாம் (நெய்தநிலப்பொருள்=உப்பும் உணங்கலும்; மழையின்றிக் கடல்வற்ற, உப்பு ஏராளமாய் உண்டாயது, மீன்கள் செத்துத் தாமே உணங்கலாயின என்பதுகருத்து) மழைப்பெயல் இல்லாமையால் அஃதின்று, மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லையென்ற

* காடுசார் நிலமுல்லை, நாடுசார் நிலமருதம், கடற்சார்பு நெய்தல், மலைச்சார்பு குறிஞ்சி, நீரின்றி வேனிற்றெறு நிலம்பாலை.

பேச்சு ஒழிந்து, எங்கும பாலையேயாயது. வேதியர் ஓதம்மறந்த னர், மன்னர் போரையொழிந்தனர். வைசியர் துலாக்கோல் துறந்தனர். வேளாளர் வளாக்கோலழிந்தனர். "சோறு" என்று அழுதலே உலகில் மிகுந்தது, உண்டியொழியவே பெண்டிர்கள் எல்லாம் அருந்ததியாயினர், மைந்தர்கள்யாவரும் அருந்தவரா யினர். நீராடடு, மஞ்சட்பூச்சு, அணி, ஆடை, மக்கட்பேறு இவ ற்றில ஆசையற்றது. ஜலம்வேண்டிக் கிணறுதோண்டுவது, பஞ் சத்துக்கஞ்சி பாதலமபோகத் தோண்டும் நுழைவழி போலும். ஜலம ஊறுகிறதே இலலை, சிறிது ஊறினும, சூரியகிரணம் உறி ஞ்சிவிடும அலலவென்று குடத்திற்கொஞ்சம் ஏறினும் குடமே குடித்துவிடுமாம்.

பயிரை அழித்ததிந்தப் பட்டியென் பாரில்லை
களவுசெய் தானிவனைக் கட்டென் பாரில்லை
எனதுன தெனும்வழக்கு இவ்வுலகத்தெங்கும் இல்லை
கலியரசு தன்செங்கோல் கண்டுமிகக் களிகூர்ந்தான்.

இத்தகைய, வற்கடகாலத்தில், காழியை உற்ற கவுதமர், ஆசிரமக்காட்சி அதிசயக்காட்சி! வயல்விளை தண்டுலத்தைவாரி யெடுத்து, நீரிற்களைந்து, உலையிற்பெய்து, வடித்த அன்னத்தை, மலைபோல குவிப்பார்கள்; கறிபல சமைத்திடுவர்; கடுகுபொரித் திடுவர்; வடைபலசெய்து குவிப்பார; பாயசம் பக்குவம் பார்த் திறக்குவர்; இடங்கூட்டிச, சலநதெளிப்பர்; இலைநறுக்கி மேல்வி ரிப்பர்; சிலாபரிமாறுவா, சிலர்பக்குவம் கேட்பர்; இளைப்பில் இருநதீர், இருந்துண்ணவென்பார் சிலர்; விருந்தையுபசரிக்கும், விதம் அறியோம் என்பார்சிலர்; இவ்வண்ணம், உண்டிநாலு, விதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் ஊட்டி, மூநீர்வழங்கி, சந் தனம் பூசி, தாம்பூலம் கொடுத்து, உபசரித்து வநதார், ஒருநாள் போலப் பனிரண்டுவருஷம். இது இம்முனிவர்க்கன்றி யாருக்கிய லும். இப்பால் க்ஷாமம்தெளிந்து, க்ஷேமம் பிறந்தது. அவரவர் தத்தம் இருப்பிடம்சேர எண்ணங்கொண்டனராய், கொண்ட எண்ணத்தைக் குறிப்பாயும், வெளிப்படையாயும், தெரியப்படுத் தியும் கவுதமர் அநுமதியாமைகண்டு, அவருக்கு ஒருகிபம் கற் பித்து, வெளிப்படக்கருதி, மந்திரசக்தியால் மாயப்பசுவொன்று சமைத்துவிட்டனர். பசு இளைத்து நின்றமையைக் கவுதமர் கண்

டிராங்கி, அய்யோ பஞ்சத்தால் இளைத்ததுபோலும், இனித்தேறும் எனச்சொல்லிக், கையால் மெல்லத்தடவினார்; மாயப்பசு கீழேவிழுந்து, உதைத்துக்கொண்டு, உயிர்மாய்ந்தது. நின்ற அந்தணர், கோகத்திசெய்த பாதக, உன்னுடன் அரைக்கணமேனும் கூடியிரோம் என்று ஓடத்தலைப்பட்டனர். கவுதமர் ஞானதிஷ்டியால் பார்க்க, பசுவானது, மாயம் என்றும், பார்ப்பனர் செய்தமோசம் என்றும் உணர்ந்து, அவர்களைசசபித்து, மாயப்பசுவை வதைத்த தோஷமும், மோசக்காரருடன் வசித்ததோஷமும், மாற்றும்படி, காழியைவிட்டு, வேளூர், வெண்காடு, திருப்புன்கூர், திருக்கடவூர் மார்க்கமாய், மாயூரத்தையடைந்து மாயூரநாதரைச் சேவித்துக்கொண்டு நிற்கையில், துர்வாசரைக் கண்டு, முகமன்கூறி, முனிவர்கோவே; அடியேன் புரிந்த கோகத்திக்கு நிவர்த்திகூறியருளவேண்டும் என துர்வாசரும், கவுதமரைநோக்கி, பசுவதையினும், பாதகர் கூட்டுறவு பொல்லாதது; அப்பாதக நிவர்த்திவகையில், உடனே முயல்வது, அவசியம்; கும்பகோணத்தையடைந்து, காவிரியாடி, மகநீர்த்தத்தின், நிருதிமூலையில், எழுந்தருளியிருக்கும் யக்ஞோபவீதேசரைத் தரிசித்துப், பூசித்துவந்தால், பாதகம் எல்லாம் பறக்கும் என்றனர். (அமுத குடத்தில் சுற்றிய நூல் விழுந்த இடத்தில் தோன்றியவராதலின் இம்மூர்த்திக்கு, யக்ஞோபவீதர் எனத்திருநாமம்; யக்ஞோபவீதம் = பூணூல்) கவுதமர் விடைபெற்றுத் திருத்துருத்தி, திருவழுந்தூர், திருவாவடுதுறை, திருவிடைமருதூர் முதலிய தலங்கள் தரிசித்துக் குடந்தையையடைந்து, காவிரியுற்று, மாகநீரும் ஆடி, உபவீதேசம் தேடிக்கிடைத்தனராய், ஆலயத்தின் பின்புறத்தில், தீர்த்தம் உண்டாக்கி, எண்ணிறந்த தீர்த்தங்களை, இதில்தாபித்து, பின்னர் மூழ்கிப்புனிதராகி, நாதனைப்பூசித்துப், பாதகம் நீங்கிப் பலவரம்பெற்றுத், தன்னிருப்பிடம் சேர்ந்தனர். இது காரணத்தால் அத்தலம் தீர்த்தம், மூர்த்திகள் கவுதமப்பேர் சார்ந்து விளங்குகின்றன.

கணபதி துணை.

கயிலையங்கிரியினின்று, கிராதரூபம் கொண்டுவந்த, கண்ணுதற்பெருமான், காபபாந்தத்தின் மிதந்து வந்து இறங்கியிருந்த, அமுதகுடத்தை உடைக்கப் பாணந்தொடுத்த இடத்தில் தோன்றிய இலிங்கம், பாணபுரேசர்; அத்தலம் பாணபுரேசம். (வாணுதுறை.) பராசபுத்திரரும், பரந்தாமமித்திரரும் ஆகிய, வியாசா வேதம் நான்கினையும் முறைப்படுத்தி, புராணம் பதினெட்டையும வெளிப்படுத்தினர். இப்பதினெண் புராணங்களில், சிவபரமானது பத்து; விஷ்ணுபரம் நான்கு; பிரமாபரம் இரண்டு; சூரியன்பரம ஒன்று. அக்கினிபரம ஒன்று; இவ்வியாசர் காசியில் வாசம் செய்கையில், ஒருசமையம், முனிவர் பலர்கூடி, வியாசரைப்பார்த்து, மேலேகூறிய ஐந்து திறத்தாரில், யாரை முன்னிட்டு மோக்ஷம பெறலாம் எனறனர். ஆரணமே மேலானநூல்; நாரணனே மேலான தேவன்; இது சத்தியம் என்று இருகையும் தூக்கிக்கொண்டு, அகிலேசர் சந்நிதியில் நின்று, உறுதிகூற; நந்திகேசர் கோபமகொண்டு, உன்கையிரண்டும் தூக்கினபடி நிற்கக்கடவது என்று சபிக்க; பராசபுத்திரர் தான் பிரமம் என்று உறுதிகொண்டிருந்த நாராயணமூர்த்தியைப் பிரார்த்திக்க, அவரோடிவந்து, கெடுத்தாயே, வியாச! இனி மறந்தும் அப்படிசசொல்லாதே, உகைமெல்லாம் நமதுடைமை, நாம் சிவனுடைமை, ஆதலால் சிவமே பரமெனத்தேறி யுய்வாயாகவென, அதையே வேதவாக்காக நம்பி, நந்தியின் சாபவிடைகொண்டு, எமபிரானைக்குறுகி வணங்கித்துதிக்க; அண்ணலும், அநுக்கிரகித்து, பொய்மொழி புகன்ற பாவத்தைப்போக்கும்படி கும்பகோணத்தையடைந்து, பாணபுரீசரைப்பூசிக்க வேண்டும் என உடனேசென்று குறித்தமூர்த்தியை விதிப்படி பூசித்து வேண்டிய வரம் பெற்றுய்ந்தனர்.

வங்கதேயத்தரசனாகிய சூரசேனன், மனைவி காந்திமதி குட்டநோயால் வருந்தினள், புரோகிதர் சொற்படி அவ்வரசன் இப்பாணபுரீசரைப்பூசிக்க மனைவி குட்டநோய் நீங்கியது, புத்திரபேறும் இப்பால் உண்டாயது. இத்தலத்தின் பெருமை யாவராலும் சொல்லுதற்கருமை.

# ஆராஅமுதர் வரலாறு.

சந்திராதித்தர்கள் சூழ்தடமாகியும், ( தடம்=மலை. ) இந்திராதி தேவர்கள் வாழிடமாகியும், எம்பிரான் திருக்கரத்தோர் தனுசாகியும், செம்பொன் அத்தனையும் ஓருருவாகியும், திசையறிவிப்பதற்கு ஓர் குறியாகியும், விளங்காநின்ற மகாமேருவின் அநந்த சிகரங்களில் ஒன்றன்மேலிருந்து, திருமகண் மணாளன் திருவடித்தாமரையை, இதயதாமரையிற்சேர்த்தி, ஏமரிஷி தவம் புரிவாராயினர். இம்மாதவருறுதிக்கு மகிழ்ந்து, பரந்தாமர் பிரசன்னமாகி, வேண்டியது யாதெனவினவ, முனிவர் எழுந்து விழுந்து பணிந்து எம்பெருமானே, யான்முத்தி விருப்புற்றனன் என்ன; இங்கிருந்தபடி என்னபண்ணினும் முத்திசித்தியாது, உம்பரும்வணங்குங் கும்பகோணத்தையடைந்து, கும்பநாதன் சந்நிதி உற்றுள்ள, அமுதவாவியின் வடகரையில் அமர்ந்து தவம் புரிவையேல், யாம் அங்குவந்து, வேண்டியது தருவம் எனச் சொல்லி மறைந்தனர். தமது தனுசு நாணையேற்றி, அரக்கியர் கழுத்து நாணையிறக்கும் 'மாதவநாமன்' மறையவே, மாதவஹேமனும், அவ்விடம் நீங்கித் திவ்வியம் ஓங்கும் குடந்தையை அடைந்து, காவிரிகுடைந்து, மாகநிராடி நாகநாதராதித் தேவ தேவரைப்பணிந்து, அமுதவாவியின் வடகரையில் அமர்ந்து, அழலும் வேனிலின், ஐந்தழல் மத்தியிலும் குளிரும் கூதிரில், தண்புனல் மத்தியிலும் இருந்து, அரவணைச்செல்வன் திருவடிமலரே அகங்குடிகொள்ள அரியதவசுபுரிவாராயினர். இவர் இங்ஙனமிருக்க, அங்ஙனம் பெருங்கடல் நடுவில், அராவணைமிசையே, அலர்மகள் கரத்தால், மலரடிவருட அறிதுயில் அமர்ந்த அண்ணல், ஒருநாள் துயில் உணர்ந்தெழுந்தனர். அலர்மேலுமங்கையும், எழுந்து வணங்கி, உலகமளந்த திருவடியாய், உம்பர்கள் பிரானே, தேன்துளிக்கும் துழாய்மாலைத்திருமார்ப, கவுத்துவாபரண, கருணைநாயக, பஞ்சாயுததர, ஏமரிஷிக்களித்த திருவாக்கு, உமது நினைவைவிட்டு நீங்கியதுபோலும், என்றனள். கரியமேனிப்பிரான், செவ்வாயும், வெண்ணகையும், சிறிதுதோன்ற, முறுவலித்து, ஏ பிரிய சகி, நீ இப்போதே எழுந்து, குடந்தையையடைந்து, ஓர் குழவி உருக்கொண்டு, அமுதவாவியிற் றோன்றிக் கம

றும், பொற்றாமரையில் உற்றிரு; ஹேமரிஷிகண்டு எடுத்து வளர்ப்பர்; யாம் வந்து உன்னை மணந்து, முனிவர்க்கும் முத்திய ளித்து வருவேம்; இறையும் தாழாமல் இன்னே புறப்படு என்ற னர். அம்மைகேட்டு, மனங்கலங்கி, கணவன் சொல்மறுத்தல், கற்புடைமைக் கழகன்றெனப் பின்னர்த்தெளிந்தனளாய், ஓ பிராணநாத, தமது ஆக்ஞைப்படி யான் இதோசெல்கின்றேன். கடிதில் வந்து காப்பாற்றல் உமது கடமையெனச் சொல்லிப், பணிந்து, எழுந்து, விடைபெற்று, வளம்பொலிந்தோங்கும் குடந்தையையடைந்து, அந்நகர்வளத்தைக் கண்ணுற்றனளாய் இந்நகர் யாம் நீங்காது என்றும் இருத்தற்கு ஏற்ற நன்னகரே யெனமதித்து, அமுதவாவியுள் அன்றுதோன்றி யொளிரும், பொற்றாமரைமலர்மீது, முற்றாச்சிறுகுழவியாய் உற்றுப் பொலி ந்தனள். ஏமரிஷியும் உதயத்திலெழுந்து, நித்தியகருமங்கள் முடிக்கும்பொருட்டு, தடாகத்தில் இறங்கினர். என்றும் கண் டிராத ஒரு அம்பொன்மலரும், அதன்மீது ஓர் அழகிய குழவி யும், இருக்கக்கண்டு அகமலர்ந்து அழகியதாமரையைக் குறுகி, குழவியைத்தொடவே அது பொற்றாமரையைவிட்டு, அவர் கைத்தாமரையைப்பற்ற, மகவை எடுத்து மார்போடணைத்து, மனையுட்கொண்டு புகுந்து, கோமளவல்லி என்னும் நாமகரணம் செய்தவர்,

1. காவல் தொழிலேயே கடமையாகப் பூண்டமாயவன் மார்பிலிருந்து, பல்லுயிரும் காப்பாட்கு, வல்ல தெய்வங்களையெல்லாம் வருத்தி, ஏம ரிஷிகாப்பிட்டார்.

2. பிராட்டி நான் இருக்க, பெற்றவனென்றும் எண்ணாமல், பிராட்டியு மாயினையே, பேதைப்பூமகளே! உன்னைக் கண்ணுற்றும் நான் பாரே ன் நான் பாரேன், என்பாள்போலத் தலையைநிமிர்த்து, அசைத்தசை த்து, அம்மைசெங்கீரை யாடினள்.

3. பொற்றாமரையில் பிறந்து, தன் கைத்தாமரையில் வளர்ந்த அம்மை யை, அகத்தாமரையலர, முகத்தாமரைமலர, தொட்டிலில் ஏற்றித் தவநம்பி தாலாட்டினர்.

4. அறிதுயில் அமரும் அய்யன் திருவடிமலரைவருடல்புரியாது, பிரிதல் மேவிய, பேதைக்கரங்களே, உம்மைப்புடையாது விடேன் என்று, புடைப்பாள்போல, மலர்நங்கை சப்பாணி கொட்டினள்.

5. மழை, கழை, மதயானை முதலியவற்றுண்டாகும் முத்தங்கள், இடி, தழல், கதம் முதலியவற்றால் ஆகும், தழல்சேர்ந்து, அழன்றிருக்கும், அம்முத்தம், நான்வேண்டேன், உன் பவளவாய் திறந்து, ஓர்தண் முத்தம் தரல்வேண்டும், என வேண்டிப்பெற்று மகிழ்ந்தார் பிதாவும்.

6. செங்கரும்பே இங்கேவா, தெள்ளமுதே இங்கேவா,
பொன்கொம்பே இங்கேவா, பூம்பாவாய் இங்கேவா,
சிலம்படியில் புலம்புறும், என்திருவே நீ இங்கேவா,
என முனிவர் வருகை கொண்டாட, வந்து மகிழ்ந்தாள் மகளும்.

7. ஹே, அம்புலீ ! பிறப்பிடத்தால், என்னம்மையை நீ யொத்தவனே யெனினும் முயற்கறையால் தாழ்ந்தவனே; அதைக்கருதாமல் அம்மை உன்னை மதித்தழைத்தாள், வருவாயேல் நோயற்று வாழ்வுறலாம்; வாராது ஒழிவாயேல், ஆயிரம்வாய்ப் பாப்பரசு, அவள் ஆணைவழி நிற்கும், உள்ளாய லயங்களை யோசித்து, ஆடவா என்று முனிவரழைக்கப் புனிதை அம்புலியாடினள்.

8. அம்மை திருக்கரத்தை, அன்றலர்ந்த தாமரையென நினைந்து இறங்கியும்; வாட்டங்கொளலால், மலர் அன்றென விசைத்தெழுந்தும், இயங்கும் வண்டுகள் என்னும்படி, கருமணியாலமைத்த அம்மனைக்காய்கள், இறங்கியேற, அம்மை அம்மனையாடினள்.

9. விழி, குழல், கணை, இடை, முக, கர, பதங்களுடன் மாறுபடாத, கயல், சைவலம், வரால், கொடி கமலங்கள் கூடிச்சீராட, அம்மை நீராடினளாம்.

10. கமலத்தவி சேயெனும்படி பவளத்தாலும், அமலன் உரமேயெனும்படி நீலத்தாலும், பலகையியற்றி ஊஞ்சலிட்டு, முனிவராட்ட, அம்மை ஊசலாடினள்.

இவ்வண்ணம் காப்புமுதல் ஊசல் ஈறாகப்பத்து பிள்ளைத் திருவிளையாட்டும் பிராட்டியாடிப், பிதாவை மகிழ்வித்து, மங்கைப்பருவம் அடைந்தனளாய், மணத்தின்மேல் நாட்டமுற்று, பரந்தாமபதியைக்குறித்துத், தந்தையைப்போலத் தாயும் தவம் புரிவாளாயினள். அம்மைதவத்தில் அமர்ந்து இருபத்து நான்கு யுகம் சென்றது. அண்ணல்துயில் உணர்ந்தாரில்லை. அசுரர்கள் பலத்து எழுந்து, அமரர்கள் வாழ்வைக்கவர்ந்தனர். அவர்கள் அலமந்து, பாற்கடலில் மத்தியில் பள்ளிகொண்டருளிய, பரந்தாமனையடைந்து, ஹே அச்சுத, ஹே அசுரகால, நெடுமுகிலே, கருங்கடலே, மரகதமலையே, மஞ்சனத்திரளே யாங்கள், அசுர

கூட்டத்தால், அடைந்துள்ள கஷ்டம் அநந்தம். இருக்கையிழந்தோம், தருக்கும் அழிந்தது, போகமெலாம் ஒழிந்தன, தேகியென உம்மையடைந்தோம், தேவரீர் துயிலுணர்ந்தெழுந்து, அடியேங்களைக் காவாது பராமுகம் செய்தால் பழுதாகும், எழுந்திரும் எழுந்திரும் என்று ஓலமிட்டலற, அய்யனும் எழுந்து அபயமளித்துச் சொல்லுவார், ஓ இந்திராதியரே உங்களை உபத்திரவிக்கும் அசுரர்களை அதம்பண்ணத்தக்க, சுதர்சனப்படையானது முன்னம் ததீசிமுனிவர் காயத்தில் தங்கி கருக்கழிந்தது, குடந்தையில் எழுந்தருளிய மடந்தைபாகனை அடைந்து வேண்டினால் வேண்டியது பெறலாம்; ஏமரிஷிக்கு அருள்புரியவும், கோமளவல்லியை மணம்புணரவும், யாம் அங்குச்செல்லவும் வேண்டும்; நீவிர் முன்னேபோய்க் காத்திருந்தால், பின்னே நாம் வந்து சேருவோம், என்று திருவாக்களித்தருள; தேவர்கள் யாவரும் குடந்தையில் சென்று, முகுந்தப்பிரான் வரவு பார்த்திருந்தனர். வரைகுடையாக்கொண்ட மாயனும், கருடனை வருகவெனக் கருதினர், பெரியதிருவடியும் குறுகி அரியதிருவடியைப் பரவக், கரியமாதவனும் எழுந்து, கடவுட் குடந்தையையடைந்து, கும்பநாதர் அமரும் செம்பொன் ஆலயத்து விதிப்படி புகுந்து வெளிப்பட்டு, ஏமரிஷி ஆசிரமத்தை அடைந்தார். மாதவரும் எழுந்து,மாதவனைவணங்கி, மாதவத்தால்வந்த மாதவையை மணம் புணர்ந்தருளவேண்டுமென வேண்டினர். அண்ணலும் இசைந்து, அம்மையை மணந்து, ஏமமுனிக்குச் சேமவீடருளி, இனித் தேவர் குறையும் முடித்தால், மூவர் குறையும் முடியுமென, நாகேசத்தையடைந்து, மாதேவரைப்பணிந்து, வந்தகாரியத்தை அறிவிக்க, நாகேசரும் மகிழ்ந்து, ஓ பைந்தாம, முன்னொருசமயம் சலந்தராசுரன், அமரர்களை அமரில் வென்று, நமையும் சமருக்கழைத்தனன்; அவன் உள்ளக்கருத்தை உள்ளவாறு அறிந்து, கால்விரலால் நிலத்தில் வட்டமிட்டு, இச்சக்கரத்தைத்தூக்கி எடுத்து உன் தலைமீது வைத்துக்கொள்ள வல்லையேல், நீயே வீரரிற் சிறந்தவீரன், நம்மையும் வென்றவனவை என்றோம்; அவனும் பலத்தின் நலத்தைக் காட்டும் பொருட்டு, முதல் மூச்சில் கணைக்காலளவாயும், இரண்டாம் மூச்சில் முழந்தாள்மட்டாயும், மறு மூச்சில் அரையளவாயும், நாலில் மார்பளவாயும் தூக்கி, ஐந்தா மூச்சில், கண்டமட்டாக்கினன், அது அவனைக் கண்டமட்டாக்

கிக் களித்து நம்முனம் வந்தது, நாம் அதை காவிரியிற் சேமித்திருக்கிறோம்; அழிந்த நம்சக்கரத்திற்கு அதுவே இணையாகும். அதை எடுத்துத்தரித்து சக்கரபாணிப்பேரைப் புதுப்பித்துக் கொள்ளல் தகும் என்றனர். அங்ஙனமே சென்றெடுத்து, அசுரர்களைச் சிதறடித்து, அமரர்களை நிலைநிறுத்தி, நாகேசனையடைந்து, ஆனந்தத்தால், அமரரை அமராராக்கிய, "ஆராவமுதே" என ஆடிநின்ற மாதவனைநோக்கி, ஓ அமரர்கள் களைகணே, ஆராவமுதே யென்று, நம்மை அழைத்தகாரணத்தால் அப்பெயரைத்தாமேயணிந்து, நமது சோமேசத்தின் உத்தரபாகத்தை தமது உரிமையாகக்கொண்டு, அமர்ந்துறைகவென; முகில்நிற அண்ணலும் சுதர்சனத்தை காவேரியிற் சேமித்துவைத்து வைகுண்டத்தில் தாம்வைகியருளிய விமானத்தை வருக என நினைக்க, விமானமும் விசைகொண்டெழுந்து விமலன் குறித்தவிடம் வந்து இறுத்தமைகண்டு, மனமகிழ்ந்து, அயனவாயில் இரண்டு படைத்துள்ள, அந்தச் சைந்தவ விமானத்துள் அராவணைச்செல்வராய் அறிதுயில் அமர்ந்தனர், அவ்விமானத்தின் அயனவாயில் திறக்கும் ஓசையைச் செவியிலேற்றவரும் புனிதரிற் புனிதராவரென்றால், விமானத்தின் பெருமையை விரிக்கவேண்டாம், விமலன் பெருமையை உரைக்கவேண்டாம். இத்தகு விமானத்தின் தக்ஷிணபாகத்தில் கோமளவல்லிகோயில் கொண்டருளுவள். இவ்விருவர் சேவையையும் செய்பவர் மண்ணுலகில் எல்லாச் செல்வமும் பெற்று வானுலகில் மாறுப்போகமும் துய்த்து வைகுண்டத்தில் மன்னிவாழுவர். ஆதி கும்பேசரையும் ஆராவமுதனையும் தாதை தாயர் என மேலோர் கொள்ளுவர்.

உ

## சுதர்சனன் வரலாறு.

கும்பேசர் சேவையில், அடங்காத விருப்பினராய் முனிவர் யாவரும் வந்து, இனிது அமர்ந்துறையும் கும்பகோணத்தை, மறையவர்யாவரும் அடைந்து, அதைத்தம் உறைவிடமாக்கினர். ஆகவே யாகாதி கிருதுக்கள் ஓயாது நடந்தன; அவிர்ப்பாகம் ஏற்க ஓயாது வருவதும் போவதும், கஷ்டமாயிருப்பது கண்டு, தேவர்கள் யாவரும் இந்நகரைத் தந்நகராக்கினர். இவ்வண்ணம்

முனிவர் வேதியர் தேவர்கள் எண்ணிலாதவர் இங்கு அமர்ந்துறையும் காரணத்தால் தவமும் தானமும் மேலிடப் புண்ணியமே எங்கும் பொலிந்தோங்கியது. இதுகண்ட அவுணர்கள், மனங்கவன்று, தமது ஆசிரியனையடைந்து, ஐய! இப்போது எங்கும் தருமமே தழைத்தோங்கக் காரணம் யாதெனவினவ, கும்பகோணத்தில் தேவராதி மூவர் கூடிவாழ்வதே காரணமென சுக்கிரன்சொல்லி, அவர்கள் அவ்விடம் விட்டு எவ்விதத்திலாவது பிரியும்படி செய்வீர்களாகில், உடனே புண்ணியம் சிறுகும், பாவம் பெருகும், அதனால் உங்கள் ஆர்வமும் பொங்கும் என்றனன். அவுணர்கள் ஆசான் சொல்லியதை அமைவரக்கேட்டு, பூமியில் கால் பற்றுதலராய், பூத, பிரேத, பிசாசரூபங்கொண்டு, கும்பகோணத்தை உற்று, கொடுமைபல விளைவிக்கலாயினர். முனிவர் யோகமறந்தனர், வேதியர் யாகமொழிந்தனர். நிர்விக்கினமாய் நிறைவேறி வந்த காரியமெல்லாம் தடையுண்டு தட்டழிந்தன. இருந்தாற்போலிருந்து இவ்விதமாறுதல் உண்டாகக் காரணமறியாதவராய், முனிவராதியர்கள் முன்னவன் சந்நிதிநண்ணி ஹேற அமுதகும்பேசா, ஆபத்பாந்தவா, அடியேங்கட்கு உற்றுள்ள ஆபத்துக் காத்தருளவேண்டும் என்று ஓலமிட்டதை ஐயன் கேட்டு, அவர்கள் முன்வந்து ஓ உத்தமர்களே! உங்களுக்கு உற்ற துன்பங்கள் அனைத்திற்கும் அவுணர் காரணர், அவர்கள் இடையூறுக்கிடையூறாய் யாம் நிற்போம், நீவிர் கவலைநீங்கி உறைவிடஞ் சேருங்கள் என விடைகொடுத்தனுப்பி, அவுணர்மாயங்களை அறமாய்க்கும் மாயவனைவருத்தி காவிரியிற் சேமித்த சுதர்சனப்படையை யெடுத்து, அத்துறைக்கருகே ஸ்தாபித்து, அதில் தாம் அதிர்ஷ்டித்திருந்து, பிசாச ரூபங்கொண்ட, நிசாசரர்களைத் துரத்திமுன்போல நலங்களனைத்தும் துலங்கச்செய்வீராகவென; காவல் முகுந்தனும் கருணையங்கடவுள் கருதியவாறு ஸ்தாபித்த சக்கரம், ஆபத்துகள் அனைத்தும் விலக்கியது.

இச்சுதர்சனனைச் சூரியன்கண்டு கவன்று என்னொளிக்கு எதிரொளிகாட்டிய இன்னோன் யாரென அறிவேன் என்று அதிகோபத்துடன் தாவியெழுந்தனன். தன்னொளி மழுங்கிப் பின்னிடக்கண்டு தளர்ந்து அச்சம்மீதூரச் சக்கர அண்ணலைத்தரிசித்துப் பூசித்தனன். ஓர்யாகம் முடிக்கும் பொருட்டு கும்பகோண

த்தை உற்ற பிரமதேவரும் அச்சக்கர அண்ணலைக்கண்டு ஆனந்தங்கொண்டு ஆலயம் அமைத்துப் பூசித்துப்போயினர். இச்சுதர்சனனைப் பூசித்தவர் இன்னுமனாகதம். இத்தகு சுதர்சனனை வில்வத்தாலாவது, குங்குமத்தாலாவது அருச்சிப்பவர்களைப் பூத, பிரேத, பைசாசங்கள் நெருங்கா; பொன்னும் மணியும் மிகப் பெருகிச் செல்வர்களாவார்கள்.

இச்சுதரிசனன் சேமிக்கப்பட்டிருந்த காவிரித்துறை **சக்கர தீர்த்தம்**. இது காசிபதீர்த்தத்துக்கும் பகவதீர்த்தத்துக்கும் இடையிலுள்ளது. இதில் பிரமன் ஆடிச் சுகித்தனன். இதைப்பரிசித்தாலும், தரிசித்தாலும் பக்தியிற்சிறந்த சித்தராவர். கறுப்பெள்ளால் தர்ப்பணம் பண்ணினால் பிதிர்க்கள் கரையேறுவர். இறந்தவர் அங்கத்தை இதில்சேர்க்க உத்தமம். இதினுடைய பலன் அநந்தம்.

௨

## வராகப்பெருமான் வரலாறு.

பிரமபுத்திரர்களாகிய, சில முனிவர்கள் மலர்மகட்கிறைவனை தரிசிக்க வைகுந்தம் சென்றனர். வாயில் காக்கும் ஜயர், விஜயர் இருவரும் சமயமல்லவென்று தடுத்தனர். விரதியர் கவன்று நின்றனர். இஃது அறிந்த இலக்குமி காந்தன் வாயிற்புறம் வந்து, வானவரோ, மண்ணவரோ யார்வரினும், நமக்கு அறிவியுங்கள் என்று செய்திருந்த உத்தரவுக்கு மாறாகப் பொய்மொழிபுகன்று, புனிதரைத்தடுத்தீர்; நமதாணையைக்கடந்த நீவிர் இங்கு அரைக்கணமேனும் தரித்தல் தகாது; அடாதனசெய்யும் அசுரர்களாகக் கடவீர் என்று சபித்து, துரத்தினர். நித்தியானந்த வைகுந்தத்தில் நீடூழிவாழ்ந்தவரும், ஓர் பொய் உரையால், வெய்ய அசுரராகுவரெனின் பொய்யேயன்றிப் பிறிது புகலாதார் புகுங்கதியாதோ அறியேம். வாயிற் காப்பாளர்கதி இங்ஙனமாக, வந்த முனிவரர் மகிழும்படி சேவைதந்து, செலவிடுத்து ஸ்ரீ பதியும் இருந்தனர். சென்ற ஜய விஜயரிருவரும், இரணிய இரணியாக்கதராய்ப் பிறந்து, அரியதவம் செய்து பெரியவரம் பெற்றனராய், மூன்று லோகங்களையும் படாதபடுத்தினர், தேவர் யாவரும் மாயவன் திருமுன் எய்தி, மண்ணுலகைக்காத்து வானவர்க்குச் சா

காமருந்தளித்த தயாளுவே! உமது சாபம்பெற்ற ஜய விஜயர்கள் இருவரும் இன்னின்னாராகிப் பண்ணும் கொடுமை பகரவொண்ணாது. இரணியாக்ஷன் எங்களைஇம்சைபண்ணி, பாருலகை பாயாய்ச்சுருட்டிப் பாதலம்புகுந்தனன். இக்கதியாங்கள் அடையப்பார்த்திருப்பது பரந்தாமபதியே, உமக்கழகோ எனக் கேட்ட அண்ணலும் அபயமளித்துப் பாதளம் செல்லுதற்கு யர்துருக்கொள்ளலாம் என எண்ணி, பிருகுமுனிவர் சொல்லியசொல் நிறைவேறவும், தேவர்கள் யாவரும் துயரக்கடலினின்று கரையேறவும், அசுரர்கள்யாவரும் அந்தகனூரில் குடியேறவும்வராகரூபமொன்றெடுத்தனர். அந்த வராகம் விண்ணை உரிஞ்சும் முதுகும், வெண்பிறை ஒத்த மருப்பும், திக்கியானையைச் செருக்கும் கண்ணும், வெற்பனைத்தும் விழுத்தும் வாலும், இடியையடைக்கும் குரலும், மலையையடக்கும் குளம்பும், ஊழிக்காற்றை உட்கொண்டு இறைக்கும் மூக்கும் உடையதாம். இந்த உருக்கொண்டு, பாதளம்புகுந்து, வெந்தகண்ணனை வெண்மருப்பு ஒன்றால் வீட்டி மற்றொரு மருப்பில் பூதலத்தை ஏற்றி, பாதலத்தை நீத்து, மேலே யெழுந்து, மண்ணுலகை தன்னிலையில் நிறுத்தினராம் வராகப்பெருமான். இவர் பாதலத்தினின்றும் வெளிப்பட்ட துவாரம் குடைந்தையிற் பொருந்தியது. இத்துவாரமே வராகதீர்த்தம், அத்தீர்த்தத்தின்மேல் கரையில் ஒற்றைமருப்புடை வித்தகவிநாயகரை ஸ்தாபித்து, அதன் கீழ்கரையில் தாம் கோவில் கொண்டருளினர். இந்த வராகதீர்த்தத்தில் ஆடி, வராகப்பிள்ளையாரைப் பூசித்து, வராகப்பெருமானை சேவிப்பவர் மண்ணும் விண்ணும் ஆண்டு பிறவா நன்னெறியும் பின்னர்ப்பெற்று உய்குவர். மாகப்பூரணையில் இடபலக்கனத்தில் இவ்வண்ணம் நிகழ்ந்ததாதலால் இதுவே இத்தீர்த்தமாடுதற்கு ஏற்றபுண்ணியகாலம்.

உ

கணபதி துணை.

## கரும்பாயிரப்பிள்ளையார் வரலாறு.

ஒற்றைக்கொம்பும், இரட்டைச்செவியும், முக்கண்ணும் நால்வாயும், ஐந்துகரமும், ஆறெனப்பெருகி, ஏழுமததாரையும், எண்

குணமும் வாய்ந்த, வராகப்பிள்ளையார் மூவுலகும் தொழுதேத்தப், பூவராகதீர்த்தக்கரையில் அமர்ந்திருந்தார், உத்தராயணபுண்ணியகாலத்தில், கும்பேசனைத்தரிசிக்க, முனிவராதியோர் கும்பகோணத்தையுற்றனர். அவர்களுடன் கரும்புவியாபாரியொருவன் கண்டோர்யாரும் இது கரும்பன்று, கமுகே எனக் கொண்டாடத்தக்க ஆயிரங்கரும்புகளைப் பண்டியிலேற்றிக்கொண்டு வந்து வராகதீர்த்தக்கரையில் தங்கினன். அங்கு எங்கள் ஆண்டகைப் பிள்ளையார், ஓர் விளையாட்டயர்கின்றார். பிள்ளைத்தனம் பிறங்கிடவோ, கரும்பில் தனக்கிருக்கும் பிரியத்தைக்காட்டிடவோ, தான்கொண்ட வேழப்பெயரை இக்கரும்பு ஏன் கொண்டதெனச் சினந்தோ, அன்பிற்சிறந்த வணிகற்கு அருள்புரிய நினைந்தோ, எதனால் இவ்விளையாட்டயர்ந்தனர் என யாமறியோம். இறைவனார் பெரியபிள்ளை யாகியதான், ஓர் மறையவர் சிறுபிள்ளையாக வந்து வணிகன் முன்னே நின்று வணிகர்பெருமானே! வண்மையிற் சிறந்தோனே! ஆசீர்வாதம் என்றனர். வணிகன் பேசாதிருக்கக் கண்டு ஏன் ஆசீர்வாதத்தை அலட்சியம் செய்தாய் என, பிள்ளையார்கேட்க, ஆசீர்வாதம் என்னவேண்டியிருக்கிறது, காரியம் உண்டானாற்பேசு என வணிகன் சொல்ல, யானொருவைதிகன் பிள்ளை, என்கையில் காசு இல்லை, கரும்பைக்கண்டவுடன் வாயூறுகிறது, ஒன்று கொடுத்தால் எனக்குப் போதுமானது, உனக்கும் க்ஷேமமுண்டாகும் என்றனர். கரும்பைவிற்றுக் காசாக்க வந்தேனேயன்றி, பார்ப்பாரக்குட்டிகளுக்குப் பங்கிடவந்தேனில்லை போ அப்பாலே என்று உறுக்கினன். அண்ணலும், உன்னிடத்தில் கரும்புவாங்காமல் ஒருக்காலும் போகேன் என்றார், வெறும்பேச்சுக்குக் கரும்பேது, காசு என்கை யேறினால், கரும்பு உன் கை ஏறும் என்று வணிகன் சொல்ல; அய்யனும், அடே ஒரு கரும்பு தரமாட்டாயா, ஆயிரம்கரும்பும் அப்படியே கொண்டு போகிறேன் பார் என்றார். பணத்தைக்கொட்டினால் பண்டியும் கூடக்கொண்டுபோகலாம் என்ன; நீ கொடாதகண்டனாயிருக்கிறாய், நான் விடாதகண்டனாக்கும், நீ கொடுக்கிறையா, நான் எடுத்துக்கொள்ளவா, ஏய்க்க இயலாது என; வணிகன், அடேதுடுக்குப்பேசி நில்லாதே, நின்றால் புடைத்தேவிடுவேன் என்றான், கிட்டேவா பார்க்கிறேன் என்று ஒருகரும்பைத் தொட்டார்; விட்டேனாபார் என்று வணிகன் கிட்டினன். செத்தேன் எனப் பயந்

தவர்போல் ஓட்டங்காட்டி, மீட்டும் சேட்டைக்கு ஆரம்பித்தார். இவ்வாறு அவன் வெருட்ட இவர் அலட்ட சங்கதி ஊரெல்லாம் பரவியது. அய்யன் கடைசியாய் ஓடியிளைத்தார்போலக் கோயிலுக்குள் புகுந்தார். புகுந்தபிறகு கரும்பு ஆயிரத்தின் சாரத்தையும்அப்படியே வாங்கிவிட்டார். செங்கரும்பெல்லாம், பேய்க்கரும் பிற்கும் பிற்பட்டதாயின. வணிகன்மெய்நடுங்க அய்யோ கெட்டேன் ஒரு கரும்பு தாவென்று உழன்றவன் இவ்வுழைத்தங்கிய உத்தமனே. என விதிர்விதிர்த்து, மெய்நடுங்கிக் கைமுகிழ்த்து வேண்டிநின்றான். அண்ணலும் அவன் அன்புக்கு மகிழ்ந்து கரும்புக்குச் சாரத்தைமீட்டுமளித்தனன். வணிகன் கரும்புமுதலிய சிறு நிவேதனங்கள் பெருக அமைத்துப் பூசைபுரிந்து, ஆலயப் பணிகள் அளவற்றனசெய்து, "கரும்பாயிரப்பெயரை" அருங்கனிற்றண்ணலுக்கு ஆக்கி, அழியாவின்பவீடடைந்தான். இக் கணபதியை யாவர்போற்றினும், அவ்வணிகன் பெற்றபேறு உற்றுவாழுதல் திண்ணம்.

௨

## வரதராஜப்பெருமான் வரலாறு.

வான்றொடு குடுமி வாயாத மயேந்திரகிரியில் மதங்கரிஷி, மகத்தான தவஞ்செய்து வந்தார். இவர் நல்வழியிலே நடந்து, அல்வழியை அகன்று, மாயையைக்கடந்து, வரம் பல அடைந்தவர். சேது, குடந்தை, காஞ்சி ஆகிய முத்தலங்களையும், நித்தலும், காலே, உச்சி, மாலைகளில் முறையே தரிசித்துப்பின் சாப்பிடும் நியதிபூண்டவர். இந்நியதியில், ஒருநாள் குடந்தையையடைந்து மத்திக்கடன் முற்றி, கச்சியிற்சென்ற கருத்தினராய் குடந்தையில் இருக்கையில், ஆகாயத்துள்ள மேகங்கள் அனைத்தையும் ஒருங்கே அழைத்துச் சோனுமாரி சொரிகவெனப், பரந்தாமபதி ஆக்ஞாபிக்க; அவ்வண்ணமே மேகங்கள் மாரிபொழிந்தன. முகிற்குலத்தின் இடி முழக்கம் ஒருபுறம், தருக்குலங்கள் ஒடிமுழக்கம் ஒருபுறம் குளக்கரைகள், முடிமுழக்கம் ஒருபுறம் ( முடிதல்=இடிதல் ) ஜலக்குழியில் படிமுழக்கம் ஒருபுறம் கோஷித்தன, முகில்தாரையால் விண்மறைந்தது, மழைத்தாரையால் கண்மறைந்தது, ஜலத்தாரையால் மண்மறைந்தது. மின்னல் எழு

வதும், இடிகள் வீழுவதும், வாடைசுழல்வதும், மழைநீர் இழிவதும் மட்டுமிதம் இல்லை. உகமுடிவு வந்து உற்றதோ என்பர், விமலன் சடைக்கங்கை மற்றதோ என்பார். இவ்வணம் மழைபொழியக்கண்ட மதங்கர் மழையோபொழிகிறது, பொழுதோ கழிகிறது வரதன் தரிசனம் ஒழிகிறது, விரதம் அய்யோ அழிகிறது; எளியேனை இப்படிப்பரீக்ஷிக்கும் எம்பிரான் திரு உள்ளம் என்ன இரும்போ, என்னுயிர்தான் என்னகரும்போ, மழைவிட்டாலாச்சு, விடாவிடில் மாய்க்கிறேன் உயிரை என்று, ஆரம்பித்தனர். வரதப்பெருமானும், இனி இறையேனும் தாழ்க்கலாகாது, தாழ்த்தால் தாழ்வுவரும், என்று கலுழனை நினைந்தார், கலுழனும் கணத்தினில் கொடுவந்து மரத்தின்கீழ் நின்ற மதங்கர் முன்னிறுத்தான். கண்டமுனிவர் தெண்டனிட்டு நிற்க, வரதன் ஓமதங்க உன்பொருட்டு யாம் கசசியைவிட்டு இப்பதி வந்தனம் வேண்டியதுகேள் என அய்ய அடியேற்கு முத்தியருளவேண்டும்; என்பொருட்டாடிய இத்திருவிளையாட்டை யாரும் என்றும் அறியும்படி, தேவரீர் இவ்விடத்தே கோயில் கொண்டருளவேண்டும்; இத்துறை என்பேர்கொண்ட தீர்த்தம் ஆகவேண்டும் என, அய்யனும் அவ்வரமெல்லாம் அளித்து ஆங்குவீற்றிருப்பாராயினர்.

௨

## கைலாயநாதர் வரலாறு.

கேதாரம் என்னுங் கேத்திரத்தில், பிப்பிலாதன் என்றொரு பெரியவர் வசித்தார். அவர் பிறைமுடிப்பிரானை யுன்னி அரிய தவம்புரிய, அராவணியண்ணலும், அருந்தவன்முன்றோன்றி ஆக வேண்டியது யாதென வினவ, அமரர் பெருமானே உம்மைக் காண்பதினும் உயர்ந்தது யாது, இல்லை; ஆயினும் யான் என்னம்மை பங்கில் அமர்ந்த உந்திருக்கோலம் கைலையிற் கண்டுகளிக்க கருத்துக்கொண்டனன், கடாக்ஷித்தருளவேண்டும் என்றனர். அண்ணலும் அதற்கிசைந்து ஹே, பிப்பிலாத கும்பகோணத்தை யடைந்து நமது கும்பலிங்கக்குறியைப் பூசிப்பையேல், நீ வேண்டிய காட்சியைப் பெறலாம் என்றனர். முனிவர்கேட்டு வெகு நாள் நோற்று மூப்புமேலிட்டு மெலிந்து இருக்கும் என்னை இவ்

வண்ணம் செய்யென்றால், எவ்வண்ணம் முடியும் என, ஐயன் கேட்டு அது சரிதான் இதோ இருக்கின்ற பொய்கையின் மூழ்கு போ என்றனர். மூழ்கிய முனிவர் காவிரி நதியில் காசிப தீர்த்தத்து எழுந்தனர். (ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்தவர்க்கு, குளத்திலிறக்கி ஆற்றிலெழுப்புவதும் சகஜமே) எழுந்த முனிவர் முன்னின்றவரைக் காணாது கலங்கி அங்கு நின்றவரை இத்தலம் யாதென வினவ, கும்பகோணம் எனக்கேட்டு எமபிரான் திருவருளை வியந்து புகழ்ந்து, திருநீறு தரித்து, கண்மணிபூண்டு "சிவாயநம" வென செபித்து, கும்பேசம் சேர்ந்து கும்பநாதரைப் பூசித்து, கூவிளவனேசராதியரைப் பணிந்து, மீட்டும் கும்பேசம் அடைந்து, கும்பிட்டு நின்று, எமபெருமானே, கயிலையங்கிரியின் உமாபாகக்காட்சி தரவேண்டும் என வேண்ட, வேண்டிய முனிவரைக் காவிரிக்கு வடபால் உள்ள சண்பகவனத்தில் தன்னருளாற் சேர்ப்பித்து ஆலயம் ஒன்று தோற்றி அதன்மேல் கோபுரம், மதில், விமானம் யாவும் கண்டு அத்தாணி மண்டபமத்தியில், வச்சிர சிம்மாசனத்தின்மீது வாத்தியமுழங்க, மாதர் கட்டியங்கூற, பணிப்பெண்கள் கவரிவீச, சிவிறியசைப்ப, பூதகணங்கள் புகழ்பாட, தேவர்கணத்தின் துதிநீட, முனிவர் குழாங்கள் தொழுதாட, மனிதர் யாரும் மகிழ்கூட பார்வதிதேவியார் பங்கமர, வேதாதீதர் வெண்குடை நிழலில், பவளமலையென வீற்றிருந்தார். இந்நலங்கண்ட பிப்பிலாதரும், ஆடிப்பாடி, ஆனந்தபரவசமாய், இறுதியில்பேரின்பவீட்டைப்பெற்று மகிழ்ந்தார். எமது அண்ணலும், இக்கோலம் நீங்கி எக்காலும் உள்ள இலிங்கரூபம் தாங்கி கயிலாசநாதரெனும் காரணப்பேர் பூண்டு இன்னும் அண்டு எழுந்தருளியிருக்கிறார். இம்மூர்த்தியை அன்புடன் சேவிப்போர் இன்பவீடடைவர்.

௨

## மாலதிவனேசர்

உதயகிரியில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் வேதத்தில் நிபுணர், பிறைசூடிய பெம்மானிடம் பேரன்புடையவர், நிசாகரன் என்னும் நாமம் பூண்டவர். இவருக்கு தூமகேது என்றொரு புத்திரன். விபூதியிடத்து மிகுந்த பக்தியுள்ளவர். இவர் முத்திகருதி

தலம் இத்தலத்தியாதென விசாரித்து கும்பகோணமெனச்சொல்லக் கேட்டு, தமதிடம் கற்போர்சூழ, இப்பதிபுகுந்து, மாகநீராடி, ஆதி கும்பேசனைத்தரிசித்து, கும்பேசத்துக்கு நிருதி திக்கில் வசிக்க எண்ணிச்சென்ற காலையில், மாலதிவனம் ஒன்றிருக்கக்கண்டு, அதைச்சுற்றிப்பார்க்க, சிவக்குறியொன்றுகண்டு தெண்டனிட்டுப் பூசைசெய்யும் நேயங்கொண்டு நீராட இடந்தேட வாருணதீர்த்தம் வழியில் தென்பட்டது; அதைப்புதுப்பித்து அதில் மூழ்கிப் புனிதமெய்தி, அந்நீர்கொண்டு, அண்ணலையாட்டி, அலர்களைச்சூட்டிப், பூசைபுரிந்தனர். இந்நாள்போலப் பன்னாள் பூசிக்க, எம்பிரான் தேவியாருடன் இடபாரூடராய்க் காட்சியருள அந்தணன்,

> ஐயனே யரு ளாளனே மழுக்
> கையனே நுதற் கண்ணனே துதி
> மெய்யனே புகழ் வேதனே புவி
> வையனே யென வாழ்த்தி யேத்தினன்.

வேண்டியதியாதென அண்ணல் கேட்டருள உமது காட்சியிற்சிறந்தது வேறொன்று வேண்டுதற்கில்லையாயினும், உலகோருய்யும் வண்ணம் இவ்வரம் வேண்டுவன்.

1. நீர் வனத்திலிருந்த குறியிடத்தும் அமர்ந்திருந்த காரணத்தால் விசுவநாதப்பேர் சேரவேண்டும்.
2. கண்டார்களிப்புறும் திருமேனியளாதலில் அம்மை ஆனந்தவல்லிப் பேர் பூணவேண்டும்.
3. யான் புதுக்கிய இவ்வாருணதீர்த்தம் என் பேராலாக வேண்டும்.
4. இத்தலத்திற்கு அபிஷேக, நிவேதனங்களுக்கும் ஆபரணாதிகளுக்கும் உதவி புரிவோர் மண்ணுலகில் மகப்பேறு முதலிய செல்வம்பெற்று விண்ணுலகில், எப்போதமும் துய்த்து, பின்னர் சிவலோகச் செல்வராகவேண்டும் என, அவ்வணம் அளித்து அந்தர்த்தானமாயினர்.

பங்குனிப் பூரணையில் இடபலக்கினத்தில் இந்நீராடத்தகும்.

உ

கணபதிதுணை.

# மகாமகதீர்த்த மகிமை.

பிரமதேவர் கும்பேசருக்கு ஒன்பதுநாள் உத்சவம் நடத்தியபின்னர், பத்தாம்நாள் அவபிருத ஸ்நானம் நடத்தி உத்சவத்தைப் பூர்த்திசெய்த விஷயம் ஈண்டு கூறப்படும். (அவபிருதம் = முடிவு; இங்கு உத்சவ முடிவின் நீராடல்.)

அமுதகுடத்தினின்றும் வழிந்தோடிய அமுதம் தேங்கி இரண்டுதீர்த்தமாயின. அவற்றிலொன்றுமகதீர்த்தம்ஆயதுஎன்று முன்னர்க் கூறினோமல்லவா? அந்த அமுதவாவியாகிய மகதீர்த் தக் கரையைபிரமதேவர் அலங்கரித்து வீதிபுதுக்கிப் பந்தரமைத் தனர். இப்பால் எம்பிரான் இடபாரூடராய் எழுந்தருள, பிராட் டியார் பிள்ளையார் தத்தம் வாகனத்துக்கொண்டு பின்னும் முன் னும் செல்ல, சோமேசராதியோர் தொடர்ந்துவர, மகதீர்த்தம் வலம்வந்து ஆங்காங்கமைத்துள்ள காவணத்தில் அவரவர்அமரக் கும்பநாதர்மட்டும் கங்கை தீர்த்தத்திற்கு எதிரில் அம்பொன் மண்டபத்தில் தங்கியருளினர். அப்பால் பிரமதேவர் அத்திர தேவரை விதிப்படி அர்ச்சித்து உத்தம தீர்த்தத்தில் ஆட்டித் தானுமாடினர், தேவருமாடினர் யாவருமாடினர், பிரமதேவர் ஆங்குத் தம்பேரால் ஓர் தீர்த்தம்கண்டனர். திக்குப்பாலகர்எண் மரும் நதிகன்னியர் ஒன்பதின்மரும் தத்தம்பேரால் ஒவ்வோர் தீர்த்தம் கண்டனர். தேவர், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர், சித்தர், வித்தியாதரர், சாரணர், முனிவராதியோர் கண்ட தீர்த் தமும் பல. ஆகவே மகதீர்த்தத்தில் உள்ளனபிரமதீர்த்தம் ஒன்று, திக்குப்பாலகர்தீர்த்தம் எட்டு, கன்னியர்தீர்த்தம் ஒன்பது, தேவ ராதியர் தீர்த்தம் அறுபத்தாறுகோடி. இத்தீர்த்தங்கள் இருக்கு மிட விவரம் இதனடியிற் காண்க:—

1. அபிமுகேசர் சந்நிதிமுதல் நாற்கரையின் நடுவும், கோணங்களும் வலமாக வர முறையே இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய திக்குப்பாலகர் தீர்த்தம் இருக்கும் இடங்களாம்.

2. வாயுதீர்த்தம் குபேரதீர்த்தம் இரண்டிற்கும் சரி மத்தி யில் பிரமதீர்த்தம்.

3. வாயுதீர்த்தம் முதல் வாயுதீர்த்தம் வரையில் வலங் கொண்டுவர பிரமதீர்த்தம் உள்ளிட்ட ஒன்பது தீர்த்தங்களுக்கும் இரண்டிரண்டின் மத்தியில் ஒவ்வோர் கன்னியர்தீர்த்தம் உற்று ள்ளன, அவை வருமாறு:கங்கை, யமுனை, கோதாவிரி, நருமதை, சரஸ்வதி, காவிரி, குமரி, பயோட்டிணி, சரயு.

4. முற்கூறிய பதினெட்டும் கரையோரத்தில் பொருந்தி நிற்க தேவராதியர் அறுபத்தாறுகோடி தீர்த்தமும் மத்தியில் உற்றிருக்கின்றன.

இத்தீர்த்தங்களில் அடியவர்கள் எய்தும் பலன்களாவன:—

| தீர்த்தம். | பல விவரம். |
|---|---|
| 1. இந்திரதீர்த்தம் ... | சொர்க்கமுறல். |
| 2. அக்கினிதீர்த்தம் ... | பாபநாசம். |
| 3. யமதீர்த்தம் ... | யமதண்டநிவர்த்தி. |
| 4. நிருதிதீர்த்தம் ... | பூத, பிரேத, பைசாச பீடை நிவர்த்தி. |
| 5. வருணதீர்த்தம் ... | புத்தி முத்திப்பேறு. |
| 6. வாயுதீர்த்தம் ... | துன்பநிவர்த்தி. |
| 7. குபேரதீர்த்தம் ... | இருநிதிப்பெருக்கு. |
| 8. ஈசானதீர்த்தம் ... | பாவநாசமும், சிந்திமனோரதசித்தியும். |
| 9. பிரமதீர்த்தம் ... | மகத்தில் நூற்றொரு தலைமுறை ஈடேறல். மகாமகத்தில் 300-கோடி தலைமுறை ஈடேறல். |
| 10. கங்கை ... | மகத்தில் கைலை சித்தித்தல். மாமகத்தில் பதினாயிர கங்காஸ்நான பலனும் சாயுச்சிய பதவியுமுறல். |
| 11. யமுனை ... | பொன்பேறு. |
| 12. கோதாவிரி ... | காம்யார்த்த சித்தி. |
| 13. நருமதை ... | பாபநாசம். |
| 14. சரஸ்வதி ... | மெய்ஞ்ஞானமும் வைராக்கியமுமுறல். |
| 15. காவிரி ... | மானஸபாவ நிவர்த்தி காம்யார்த்த சித்தி. |
| 16. குமரி ... | பதினாயிர அஸ்வமேத பலசித்தி. |
| 17. பயோட்டிணி ... | காமதேனுவுடன் கூடி வாழும் வாழ்வு. |
| 18. சரயு ... | கலி கஷ்ட நிவர்த்தி. |
| 19. அறுபத்தாறுகோடி தீர்த்தம். ... | உலகத்தில் தீர்த்தமென்று பேர்பெற்றுள்ளனவற்றுடிப் பெறும் பயன் அனைத்தும் ஒருங்கே பெறல். |

இத்தகைய தீர்த்தங்கள் அமைந்துள்ள மகதீர்த்தத்திற்கு மாமாகதீர்த்தம், கன்னிதீர்த்தம், பாபநாசதீர்த்தம், அமுததீர்த்தம் எனும் பிரதிநாமங்கள் உண்டு.

1. இம்மகதீர்த்தத்தை ஒருதரம் வலம் வந்தால் பூமியை நூறுதரம் வலம் வந்ததொக்கும்.
2. இதை ஒருதரம் நமஸ்கரித்தல் சிவபெருமானை என்றும் இடைவிடாது நமஸ்கரித்ததாகும்.
3. இதில் ஒருதரம் ஆசமனம்செய்ய மேருவொத்த பாவமும் தீரும், தசையால் எலும்பால் மயிரால் தோலால்

உண்டாய பாவம பறக்கும்; கோடி ஜன்மத்தை ஈடேற்றும.

4. ஒருதரம் மூழ்கிருல் வேதமோதல், யாகமியற்றல், முதலியவற்றை விட்ட பாவியும் கரையேறி முக்தனுவன். (ஆசாரம் குறைந்த பிராமணன் என்பது கருத்து.)

5. ஸ்நானம் செய்ய நினைத்தாலும், தனதனைவிடத் தனிகனுவான்.

6. மாமகதினத்தில் மேற்கூறியவற்றைச் செய்தால் கூறிய பலனில் கோடிமடங்குறலாம்.

7. விதியறியாத சிதடன் மூழ்கினும் புவியாளும் பதியாவன்.

8. விதியறிந்து மூழ்கில் கங்கைக் கரையில் நூறுவருஷம் தங்கி விதிப்படி மூழ்கிய பலன் கிடைக்கும். புத்திரப் பேறுமுதல் எத்தரப்பேறும் உறும்.

9. சந்ததிவேண்டி, ஐந்து மகம் மூழ்கில் தீர்க்காயுளுள்ள மைந்தனை யடையலாம்; மாமகத்தில் மூழ்கினுல் சுப்பிரமணியனே சுதனுக வருவன்.

10. மகதீர்த்தத்தில் விதிப்படி மூழ்கி, சிவபெருமானைத் தரிசித்தால் சிவசாரூப்பியமுறும்.

11. உத்சவகாலத்தில் ஆடிற்பிரமனுவன்; தீர்த்தவாரியில் மூழ்கில் சிவசாரூப்பியமடைவன்.

12. மாகப்பூரணையில் விதிப்படி நானதானுதிகள் பண்ணிருல் எழுகுலமும் கரையேறும்.

ஏழுகுலமாவன:— தன்குலம், தான் பெண்கொண்ட குலம, தன்னுடன் பிறந்தாள் குலம், தந்தையுடன் பிறந்தாள் குலம், தாயுடன் பிறந்தாள் குலம், அவளுடன் பிறந்தான் குலம், தன்பெண் கொண்டான் குலம், என்பனவாம்.

13 மாமகப்பூரணையில் மூழ்கில் நூற்றொரு குலம் ஈடேறும். நூற்றொரு குலமாவன:— மேற்கூறிய ஏழுகுலத்தை மாதவர்க்கம் பிதிர்வர்க்கம் என இரட்டிக்கவரும் பதினுன்கிற்கும் ஒவ்வொன்றிற்கு எவ்வேழாகத் தோன்றுவன தொண்ணூற்றெட்டு இவற்றுடன் அரசன், ஆசான், மித்திரன் ஆகிய முக்குலமும் கூட்டப்பெறுவன நூற்றொன்றாம்.

மாமகமாவது சிங்கராசியில குரு இருக்கும் வருடத்தில் வரும் மாசிமகம். இவ்வருடத்தில் கங்கை முதலிய தீர்த்தமும், பிரமன் முதலிய தேவர்களும், சாகரூகையர்களாய், கும்பகோணத்தில் மகதீர்த்தத்திலும், மாதேவராலயத்திலும் வசிப்பார்கள். (சாகரூகையர்=புல்பூண்டு ரூபம்.) ஆதலால் இவ்வருடத்தில் இத்தீர்த்த யாத்திரை ஒன்றே செயல் தகும். மற்றவை செய்யில் அதனுல்வரும் பலனில்லை. விவாகம், சௌளம், உபநயனம் முதலியவை செய்யவொண்ணுது. மாமகஸ்நானம் செய்யாதவர்களுக்கு இதுகாறும் செய்த புண்ணியமனைத்தும் போய்விடும்.

மறையவர், குரு, பிதா, ஈஸ்வரன், இவர்கள் விஷயமாய்ச் செய்த பாதகங்கள், சிவசொத்தை அபகரித்தல், சிவதருமம் சிதைத்தல், சிவாலயத்தில் தகாதன செய்தல், சிவபூசை செய்யும் மறையவரை இகழ்தல், ருத்திராக்ஷம் முதலிய சிவசாஸனங்களை விற்றல், அவற்றைத் திருடல், அரசு வில்வங்களை யழித்தல், வாக்குத்தத்தம் பிறழல், துஷ்டரோடு சேருதல், சிவலிங்கத்தைத் திருடல், கன்னியை விற்றல், அவர்களைத் திருடல், பசுவை வருத்தல், சிநேகனுக்கு விரோதம் செய்தல், கருவை யழித்தல், காவினை யழித்தல், சர்ப்பத்தைத் தடிகொண்டடித்தல், சூதாடி யுண்டல், இழிஞர்பால் கைகட்டி ஏவல்செய்தல், கொலைசெய்து கூலிகொண்டுண்ணல், சிவனடியாரை அவமதித்தல், அவர் பொருள் கொள்ளல், அவர்க்கிடர்புரிதல், அவர் பசித்திருக்கத் தானுண்ணல், கன்றுக்குப் பால்விடாது கறத்தல் காரியமாக வேண்டிய காலத்துச் சிநேகித்து காரியமுடிந்தபின் கைவிடல், சூரியன் உதித்தபின் மாதரோடு முயங்கல், சிரார்த்த தினத்தில் சம்போகித்தல், பெற்றவர் பசித்திருக்கத் தானுண்ணல், பிதிர்சிரார்த்தம் இகத்தல், பெரியவர் கொடுக்கும் திருநீற்றை ஒருகையால் வாங்கல், கற்புடையவர்க்குக் குற்றங் கற்பித்தல், பஞ்சம் வரவேண்டுமென்று பிரார்த்தித்தல், பொருளைத் தேடிப் புதைத்து வைத்தல், தன் தாரமல்லாரைப் புணருதல் ஆகிய இப்பாதகங்கள் மாமகதினத்தில் மகதீர்த்ததில் விதிப்படி ஒருதரம் மூழ்கில் தீயின் சேர்பட்ட பஞ்செனப் பறக்கும். இத்தீர்த்தத்தில் தினம்தினம் மூழ்குதல் உத்தமம். முடியாவிடில் சித்திரை, கார்த்திகை, மாசி இம்மூன்று மாதங்களில் மூழ்குதல் நலம். இது முடியாவிடில் மாசியிலேனும் மூழ்குதல் போதும்.

அதுவும் முடியாவிடின், மாசி மகத்திலேனும் மூழ்குதல் வேண்டும். அதுவும் முடியாவிடில் மாமகத்திலாயினும் ஆடல் வேண்டும். பலகாரணத்தால் இதுவும் முடியாவிடில் ஆடி வருவோரைத் தேடித் தரிசித்தல் வேண்டும். இதுவும் முடியாவிடில் கும்பகோணம் இருக்கும் திக்கை நோக்கி பூசித்துத் தீர்த்தத்தைத் தியானித்து இருத்தல் வேண்டும். இதுவும் முடியாதென்றால் இதற்குமேல் விதி சொல்ல எம்மால் முடியாது. தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணும் பருவகாலங்களாவன: அமாவாசை, பௌர்ணிமி, மாதப்பிறப்பு, இரண்டயன புண்யகாலம், கிரகண புண்ய காலம், சுக்கிரவாரம், மகாவிதீபாதம, கார்த்திகை, * கயசசாயை துரங்கச்சாயை, சிவராத்திரி ஆகிய இவைகளே.

விதிப்படி என்று மேலே குறிப்பிட்ட விதிகள் நானவிதி, தானவிதி என இருவகை. நானவிதிகளாவன: தூரதேசத்துள்ளவர்கள் யாத்திரை எத்தனிக்கு முன் நித்திய, கிருத்தியம் நிரப்பி புண்யாகவாசனம செய்து, அங்கீரைப் புரோக்ஷித்து ஆசமனம் செய்து, பஞ்சகவ்யம் உண்டு, பிராமணர்க்கன்னமிட்டு, கோடி கொடுத்துக் குருவை வணங்கி, அனுக்ஞைபெற்று பெண்டு பிள்ளைகளுடன், புறப்பட்டு, வாகனமின்றி காலால் நடந்து, கும்பகோணத்தைக்குறித்துசசெல்லுகையில், அத்தலபுராண சிரவணம் செய்துகொண்டு, இனிய உணவு, தாம்பூலம், க்ஷவரம், சம்போகம் நீக்கி, நல்லோரோடு கூடி, இரவில் உண்ணுமல், பழையது, பக்ஷணம்,தன்னிலும் தாழ்ந்தோர் உண்டசேடம் தள்ளி, உதயநீராடி குருபூசைபண்ணி, உச்சிநீராடி சிவபூசைசெய்து ஐந்தெழுத்தோதிச் செல்லும் நியமம் பூண்டு கும்பகோணத்தை யடைந்து, கும்பேசராதியரைப்பணிந்து, மகதீர்த்தக்கரை சேர்ந்து தீர்த்தத்துள் அதிர்ஷ்டித்து இருக்கும் தேவர்களை வணங்கி சங்கற்பித்து அநுக்ஞைபெற்று பழம், புஷ்பம், செங்குங்குமம், தாம்பூலம், எலுமிசசம்பழம், காதோலை, கருமணி, கைவளை, ரவிக்கைகளை ஒருமுறத்தின்மேல் வைத்து மற்றொரு முறத்தால் மறைத்து (மறைக்காவிடில் பலன் குறையும்.) சுமுகமுள்ள சுமங்கிலி கையில் கொடுத்துவிட்டு,கங்கையின் கூட்டத்தையடைந்து தீர்த்த பூசைசெய்து, காதோலை கருமணி முதலியவைகளை தீர்த்தத்தில் இட்டு, ஸ்நானம்பண்ணி, பிதிரர்க்குத் தர்ப்பணம் விதிப்படிசெய்து, மடியுடுத்து ,விபூதியை உத்தூளனம்பண்ணி, திரிபுண்டரமாகவும் மேலிட்டு, ஐந்தெழுத்தோதி, வடகரை அரசை

[illegible]யில் செம்மையாய் உட்கார்ந்து, சுத்தி [illegible] அருச்சித்து, காதோலை முதலிய சார்த்தி, பிராமண[illegible] அறுசுவையுணவை உறுசுவையோடளித்து, தாம்பூலதக்ஷி[illegible] கும்பேசாரியரைத்தொழுது, பசியாற்றும[illegible]காருடன் புசித்து பாயிற் படுக்காது இருத்தல் வேண்டும்.

தன்னூருக்குத் திரும்புநாளில, கண்டம் மட்டும் க்ஷவரம் செய்துகொண்டு, ஸ்நாநமசெய்து, இரஷியசிரார்த்தம செய்து, அன்றிரவு உண்டிகொள்ளாது இருந்து, மறுநாள விதிப்படி சிரார்த்தம செய்து, ஸ்தலத்தை விட்டுப்புறப்பட்டுத் தன் இருப்பிடம் சேர்ந்து, பிராமணாக்கன்னமிட்டு, அவா ஆசிபெற்று யாத்திரை நியமம நீக்கி ஆசிரமநியமம தாங்கி மகிழ்வதே நான விதிகளாம.

## தான விதிகளாவன.

விதிப்படி ஸ்நாநம செய்து புனிதராகிய பின்பாசிவபத்தியிற்சிறந்த பிராமணரை வருத்தி, ஆசனத்திருத்தி, அருக்கியமளித்து, சந்தனபுஷ்பம தரித்து, பசு, கன்னிகை, பொன், ரத்தினம, குடை, வஸ்திரம், பூணூல, குதிரை, பணிப்பெண், இடபம, தானியம, விபூதி, சந்தனம, பால், அன்னம், பாயசம், இனியகனிகள், தாமபூலம, முதலியன மறைவிடத்து வழங்கவேண்டும்,

கோதுமையைப்பரப்பி, அதன்மேற் பழங்களைக் கொட்டி வஸ்திரத்தால மூடிக்கொடுக்கவேண்டும்.

யானை, எருமைக்கடா, பிடரியிற்சாயாத கொமபுள்ளதும மயிர் செறிந்ததுமான வெள்ளாட்டுக்கடா, இவைகளைக கொடுத்தல் வேண்டும (இவை அவமிருத்தானம எனபார்கள்.)

காலபுருஷதானம் செய்யவேண்டும. (காலபுருஷதானமாவது கறுப்புக்கம்பிளியால் புருஷாகிருதிசெய்து எள்ளும பொன்னுங்கலந்தடைத்து, இடதுகையில் விளக்கும, வலதுகையில் கத்தியும்கொடுத்து இருட்டுவீட்டில் வைத்து, பிராமணரையழைத்து பசும்பொன் நிறையக்கொடுத்து இவ்வுருவைத்தானம் செய்தலேயாம: இதுகாலமிருத்யு திருப்திக்காகச்செய்வது.)

## இருமுகச்சுரபிதானம் செய்யவேண்டும்.

(இருமுகச்சுரபி = அப்போது ஈன்று கொண்டிருக்கும பசு, பசுவின் அந்தாற்று முழுப்பலனையும் பிராமணன்அடைய வேண்டி இந்தத்தானம் செய்வதுபோதும.)

முற்றிற்று.